பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு $1\frac{1}{2}$ அணா




| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ. 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஷு ஆவணி மீ 12 உ (28—8—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 18



இனம்! இனம்!! இனம்!!!

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்கைப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்ற முள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
ஸில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஷு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது
நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பாகிங் தபால்செலவு இனம் — விலை ரூ. 6—8—0

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

# கவர்மெண்டு உத்தியோகங்களில் முஸ்லிம்கள்.

## குறைந்திருப்பதற்குக் காரணங்களும் பரிகாரமும்.

### ஆங்கிலப் பத்திரிகையொன்று முஸ்லிம்களுக்கு அத்தியாவசியம்

கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் முஸ்லிம்களுக்கு போதுமான அளவு பிரதிநிதித்துவம் இல்லாததைக்கண்டு முஸ்லிம்கள் கவலைகொண்டிருப்பதுடன் திகிலுமடைந்திருக்கிறார்களென்று சமீபத்தில் மாகாண முஸ்லிம் லீக் சபையின் கௌன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதிலிருந்தும் சென்னை சட்ட சபையின் அடுத்த கூட்டத்தில் ஒரு பிரேரேபணை கொண்டுவரப்போவதாக ஜனாப் பஷீர் அஹமத் சாஹிப் அறிக்கையொன்று கொடுத்திருப்பதிலிருந்தும் நன்கு விளங்கும். கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் பிராமணர்களுக்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் இருக்கிறதென சொல்லுவதற்கில்லையானாலும் போதுமான அளவு இருக்கிறதென்பதை மறுக்க முடியாது. ஜஸ்டிஸ் கட்சியாரின் கிளர்ச்சியின் காரணமாக பிராமணரல்லாதாருக்கு தற்சமயம் கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் அதிகமாகப் பிரதிநிதித்துவம் கிடைத்து வருகின்றது என்பதற்காக ஜஸ்டிஸ் கட்சியாரைப் பாராட்டவேண்டியது அவசியமே. கிருஸ்துவ சமூகத்தினர் முஸ்லிம்களைவிட ஜனத்தொகையில் குறைந்தவர்களாக இருந்தும் கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் கிருஸ்தவர்களுக்கு ஜனத்தொகையின் அளவைவிட அதிகமாகப் பிரதிநிதித்துவம் இருந்து வருகிறது. முஸ்லிம்கள்தான் திக்கற்று அநாதைகளாய் நிற்கிறார்கள். முஸ்லிம்களுக்கு எந்த சமூகத்தின் மீதும் துவேஷமேனும், வருத்தமேனும் கிடையாது.

இதர சமூகத்தினர்கள் அதிக முன்னேற்றம் அடைந்து மகாண கவர்ன்மெண்டு உத்யோகங்களில் அதிக ஸ்தானங்கள் பெறுவதை நாமொன்றும் குறை கூறுவதற்கில்லை. ஆட்சேபணையும் செய்யவில்லை ஆனால் கவர்ன்மெண்டு உத்தியோகங்கள் சம்பந்தப்பட்டவரையில் முஸ்லிம்கள் பரிதாப நிலையில் இருப்பதுதான் நமக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கின்றது. முஸ்லிம் சமூகத்தாரின் முக்கியத்தையும் அவர்களுடைய புராதன பெருமை கௌரவத்தையும் கருதுவோமானால் நாட்டின ஆட்சியில் முஸ்லிம்களுக்கு அதிக செல்வாக்கு இருக்க வேண்டியதுடன் கவர்ன்மெண் உத்தியோகங்களிலும் முஸ்லிம்களுக்கு ஜனத்தொகையின் அளவைவிட அதிக பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுவது அவசியமென்பதையும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்

சில தினங்களுக்கு முன் சென்னை மாகாண முஸ்லிம்கள் சபையார் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்திலிருந்து கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் பெரும் பதவிகளெல்லாம் முஸ்லிம்களல்லாதாருக்கு இருந்துவருவதாகத் தெரியவருகின்றது பெரிய உத்தியோகப்பதவிகள் சம்மந்தப்பட்டவரையில்தான் முஸ்லிம்களுக்கு இக்கெதியெனின் சிறு உத்தியோகங்கள் சம்மந்தப்பட்டவரையிலகூட முஸ்லிம்கள் நிலைமை மிகவும் பரிதாபகரமானதாகவே இருக்கின்றது கிடைத்த வரையில் புள்ளி விவரங்களைச் சேகரித்திருக்கிறேன். நிலைமையை கவனித்தால் முஸ்லிம்கள் கண்விழித்துக்கொள்ளுவார்கள். புள்ளி விபரங்களை முஸ்லிம்கள் கவனித்துப் பார்ப்பார்களானால் முஸ்லிம்கள் தங்கள் உண்மை நிலைமையை உணர்ந்து கொள்ளுதல் எதுவாக இருக்கும். பின்வரும் புள்ளி விபரங்கள் முற்றும் சரியானவையென்று சொல்லுவதற்கில்லையாயினும் அவைகள் சரியானவையென்றே நான் நம்புகிறேன்.

| வருஷம் | உத்தியோகப் பதவிகளின் எண்ணிக்கை. | உத்தியோக விபரம். | முஸ்லிம்கள் | 100-க்கு எத்தனை விகிதம் |
|---|---|---|---|---|
| 1924 | 1474 | கெஜட்டட் ஆபீசர்கள். | 51 | 3 1/2 |
| 1922 | 3940 | சம்பளம் 100-க்கு மேற்பட்டதும். | 259 | 6 1/2 |
| 1923 | 4070 | ,, | 290 | 4 |
| 1924 | 4730 | ,, | 190 | 4 |
| 1922 | 20956 | 35 முதல் 100 ரூ. சம்பளமுள்ளது | 1210 | 5 |
| 1923 | 21414 | ,, | 1234 | 5 |
| 1924 | 21119 | ,, | 1437 | 6 2/3 |
| 1924 | 55732 | 35-க்கு உட்பட்ட உத்தியோகங்கள். | 12047 | 21 1/6 |

மேலே காட்டப்பட்டுள்ள புள்ளிக்கணக்குகளிலிருந்து என்ன விபரம் தெரியவருகின்றது? முஸ்லிம் மக்களுக்கு கான்ஸ்டேபிள்கள் பியூன்கள் முதலிய பதவிகள்தான் பட்டங்கட்டப் பட்டதுபோல முஸ்லிம்கள் இந்த பதவிகளிலதான் அதிகமாக இருக்கிறார்கள். 35 ரூபாய்க்கும் அதற்கும் மேற்பட்டவும் உத்தியோகப் பதவிகளில் முஸ்லிம்களுக்கு ஸ்தானங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ரூபாய் 100-க்கும் அதற்கு மேற்பட்டவும் உத்தியோகங்களில் முஸ்லிம்கள் பிரதி வருஷமும் பின்னடைந்து வருகிறார்களென்பது நன்கு விளங்கவில்லையா? முஸ்லிம்கள் தற்சமயம் விழித்துக்கொண்டு முன்னேற்றமடைய முயற்சிசெய்யவில்லையானால் முஸ்லிம்கள் நிலைமை பரிதாபமாகிவிடுமென்பதுதான் தருசவாகவில்லையா?

கவர்ன்மெண்டு உத்தியோகப் பதவிகளில் உயர் பதவிகளுக்கு லாயக்கானதும் தேர்ச்சி பெற்றதுவும் திறமையானவும் முஸ்லிம்கள் கிடைப்பதில்லையெனச் சிலர் கூறுகிறார்கள். இப்படிக் கூறுவது சுத்த அசட்டுத்தனமான வார்த்தையாகும். இவ்வாறு கூறுவதற்குத் தகுந்த ஆதாரங்களைக் காணோம். இப்படிக் கூறுவது பழைய பாட்டிக் கதையாகும். பட்டம் பெற்றும் உயர்தர பரீட்சைகளில் தேறியும் முஸ்லிம் வாலிபர்கள் பலர் வேலையில்லாமல் திரிகின்றார்கள். திறமையானவும் போதுமானவும் முஸ்லிம் ஒரு காலத்தில கிடைக்காமலிருந்தார்கள். ஆனால் அக்காலம் இப்பொழுது மலையேறி மறைந்து போய்விட்டது திறமையான முஸ்லிம்கள் கிடைப்பதில்லையென்று கூறும் காரணம் இப்பொழுது பொருந்தாது. நம் மாகாணத்தில் முஸ்லிம்கள் இளைஞர்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்காமல் சுதேச சமஸ்தானங்களுக்குச் செல்லுகிறார்கள்.

தற்காலமுள்ள பலதாமாகாண நிலைமையை மாற்றி நல்ல நிலைமையை எப்படி சம்பாதித்துக் கொள்ளுவது? போராட்டம் பலமாக இருக்கும் இக்காலத்தில் யார் உறக்கக் கத்தி முறையிட்டுக் கொள்ளுகிறார்களோ அவர்கள் சப்தமே கேட்கப்படும். தங்கள் நிலைமையும் கதியும் திருப்திகரமாக இருக்கிறதென்பதாக நினைத்துக் கொண்டிருத்தல் கூடாது. முஸ்லிம்கள் தங்களுடைய உரிமைகளுக்காக சட்ட வரம்பிற்குட்பட்ட கிளர்ச்சி செய்து வரவேண்டும். வருஷத்திற்கொருதாம் "லீக்" சபைத் தீர்மானம் செய்துவிட்டு மௌனம் சாதிப்பதால் எவ்வித நன்மையும் சமூகத்திற்கு ஏற்பட்டுவிடாது வெகுநாளாக காத்து காத்துப் பார்த்துவிட்டோம். நம்முடைய நிலைமை சுயமரியாதைக்கு மிகவும் தாழ்ந்ததாக இருக்கின்றது நமமுடைய நிலைமைக்குப் பிரசாரம் நம்மிடமே இருக்கின்றது. நம்முடைய உரிமைகளை நாம் பலமாக வற்புறுத்த வேண்டும். சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியைப்பற்றி கவர்ன்மெண்டார் அலட்சியஞ் செய்யக் கூடாது.

முஸ்லிம்களுக்கு ஆங்கிலப் பத்திரிகையொன்று இல்லாதிருப்பது மிகவும் கஷ்டமான நிலைமையாக இருக்கின்றது. சுதேச பாஷைப் பத்திரிகை "ஆஸாதெஹிந்து" "ஸைபுல் இஸ்லாம்" "ரஹ்பர்" முதலிய பத்திரிகைகள் முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் ஊழியத்தைச்செய்து வருகின்றன; ஆனால் நம குறைகளை வெளியிடுவதற்கு ஆங்கிலப் பத்திரிக்கை யொன்று அத்தியாவசியமாக இருக்கின்றது. முஸ்லிம்களல்லாத பத்திரிகையை எதிர்பார்த்து நிற்பதில் அப்பத்திரிக்கைகளின் கொள்கைகளுக்கு விரோதமான செய்திகள் முஸ்லிம்களனுபவினால் பிரசுரமாவதே கிடையாது. இந்நிலைமையில் முஸ்லிம்களுக்கு ஒரு ஆங்கில பத்திரிக்கை அவசியமென்பதை சமூகம உணர்ந்து நடக்கவேண்டுமெனக் கோருகிறேன் என வேலூரிலிருந்து ஒரு முஸ்லிம் எழுதுகிறார். ("ஸைபுல் இஸ்லாம்"

# அவியல்

## 10-ம் பாகம்

### கைவல்லிய சாமியார எழுதுவது.

அறிவு ஏற ஏற ஜாதி உயரும். ஜாதி உயர உயர நிர்ப்பந்தங்கள் அதிகமாகிக்கொண்டே போகின்றன. மிகவும் தாழ்ந்த ஜாதியில் உள்ளவன் தனக்கு இஷ்டமானதை புசிக்கவும் குடிக்கவும் கூடும் சமூக வாழ்க்கையில் மனிதனுடைய நிலைமை உயர உயர நிர்ப்பந்தங்களும் அதிகம். இந்தியாவுக்கே வம்சபாரம்பரையாக ஆசாரியஸ்தானம் வகிக்கும் பாப்பார ஜாதியில் உள்ளவனுக்கோ வாழ்க்கையில் சுகங்கள் மிக்க ஒடுக்கப்பட்டிருக்கின்றன; உலகவாழ்க்கைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களுடைய வாழ்க்கைவிடாப்பிடியான சந்யாசத்துவம் என்றே சொல்லத்தகும். இந்த வாழ்க்கையில் பூரணமடைந்து ஞானம் அடைவதில்தான் பிராமணன் என்னும் பெரிய பதவி நிலைத்திருந்தது. பிராமணர்களைப் பற்றியும் அவர்கள் ஆச்சாரியத் தன்மையைப் பற்றியும் பெரிதாகப் பாராட்டுகிறீர்களே ஒழிய இந்த விசித்திரமான கூட்டத்தாரை இதரர்களுக்கு அதிகாரிகளாகச் செய்து இருக்கும் விந்தையாதென்று யோசிக்கத்தொடங்கினீர்களா? இந்ததேசத்திலுள்ள இதர வகுப்பாரைக் காட்டிலும் இந்தக் கூட்டத்தாரே உலக உபகாரநிமித்தம் உலக சுகங்களைவிட்ட ஏழைகள், ஆனால் அவர்கள் அநுஷ்டிக்கும் துறவு நிலைமைபோன்ற வாழ்க்கையில் தான் அவர்களுடைய பலம்முழுமையும் தங்கி நின்றது. அவர்கள், சொத்துக்கு ஆசைப்படக்கூடாது. எந்த சொத்தும்வைத்திருக்கவும கூடாது. மற்றவர்களை கவனித்துவிட்ட பிறகுதான் தன்னை கவனித்துக் கொள்ளவேண்டும். இதுவே பிராமண ஒழுக்கமும் சாஸ்திரங்கள் எழுதியிருப்பவைகளுமாம். இப்பொழுதோ இதரர்களை வஞ்சித்து மோசத்திற்குட்படுத்தி இரக்கமென்பது இல்லாமல் எல்லாவற்றையும் அபகரித்து, உலக போக போக்கியங்கள் அதகளையும் அநுபவித்து, எத்தொழிலையும் செய்து, நெறியையும் ஒழுக்கத்தையும் விட்டு, பணம் ஒன்றே பிரதானமாகக் கருதி, ஏமாற்றுவதே தொழிலாகக் கொண்டிருப்பவன் தான் பிராமணன் தனக்கே ஜாதி உயர்வும் மதமரியாதையும் வேண்டுமென்கிற ஆசையினால் மற்றவர்கள் பாத்தியதையை அபகரிக்க அவன் செய்த சூதில் எல்லோரும் அவனைப் பகைக்கிறார்கள்.

தீட்டு என்றால் அழுக்கு அசுயை என்பது பொருள். வெளித் தீட்டென்றும் உள் தீட்டென்றும் இருவகைப்படும். வெளித்தீட்டு தேகம். உள்தீட்டு மனம். குப்பை கூளம் சாக்கடை மத்தியில் அழுக்காய் இருப்பதுவும், பல்லில் பாசம் அடைந்து சீலைப்பேனும் எல்லாவித அழுக்கும் உள்ள உடையை மடி என்பதும், பலவியாதி நிறைந்த எச்சிக் காப்பி குடிப்பதுவும், சிரங்கும் மேகமும் நிறைந்த பரிசாரகன் அர்ச்சகன் ஆச்சாரியார்களிடம் அரை சொரியுமழுக்கும் புகயிலைப்பொடிநிறைந்த மூக்குசளி சிந்தினகையில் டின்காரமும்சேர்த்தபிரசாதம்வாங்கி உண்பதைவிட ஒருவனைத் தொடும் வெளித்தீட்டு ஒன்றும் செய்துவிடுவதில்லை. இந்துக்கள் எப்பொழுதும் அந்தர்முக திருஷ்டி உடையவர்கள். ஆனதினால் மனத்தூய்மை, பரோபகாரம், நல்லது கெட்டதை பகுத்துப்பார்த்தல், தன் குற்றம் தெரிதல், ஏழைக்கிரங்கல், தன்னால் ஆனதைச் செய்தல் முதலிய குணங்கள் எல்லாம் இல்லாதிருப்பதைவிட ஒருவனைத் தொட்டதினால் உண்டாகும் தீட்டு உள் மனதைக்கெடுத்து இவனை நரகத்துக்கனுப்பாது. தீட்டு என்பதற்கு மாதர்கள் சூதகத்துக்கும் பெயர் உண்டு. தீட்டின் பரிணமமே இந்த தேகமானதால் இந்த தேகம் என்னும் தீட்டை போக்கிக் கொண்டால் ஆத்மா சுயரூபத்தை அடையுமென்னும் தத்துவார்த்தத்தை இந்த சாஸ்திரங்கள் தெரிந்த பெரியவர்கள் சொல்லுகிறார்களே ஒழிய இன்னொருவனைத் தொட்டால் தீட்டு உண்டாகுமென்றும் நரகம் வருமென்றும் சாஸ்திரமும் சொல்லவில்லை. பெரியவர்களும் வியகரித்ததில்லை.

சீர்திருத்தம்செய்ய வல்லவனாக வேண்டுமானால் அவசியம் இருக்கவேண்டிய அம்சங்களில் முதல் முதலாக அநுதாபம் வேண்டும். உலகத்தில் எவ்வளவு துக்கங்களும் அறிவீனமும் மூடபக்தியும் இருக்கிறதென்று உண்மையாகவே உணரவேண்டும். மனிதர்களெல்லாம் சகோதரர்கள் என்கிற அன்பிருக்கவேண்டும். இவ்வித அபிப்பிராயம் சரீர முழுமையும் குடிகொண்டு இரத்தத்தோடுகூட இந்த உணர்ச்சியும் ஓடிக்கொண்டு நாடிகளோடுகூட இதுவும் சேர்ந்து துடித்து சரீரத்திலுள்ள ஒவ்வொரு நரம்பிலும், ஒவ்வொரு பாகத்திலும் இந்த அநுதாபம் பரவிக்கொண்டு அநுதாபமே நிறைந்த பிண்டமாகவே யிருக்கவேண்டும். இதுவே முதற்படி. பிறகு விருத்தி அடையும் படியான மார்க்கம் ஏதேனும் கண்டுபிடித்தோமா என்று கவனிக்கவேண்டும். பழைய கொள்கைகளெல்லாம் மூடபக்தியாகவே இருக்கலாம். ஆனால் இந்த மூடபக்தித் தொகுதிகளைச் சுற்றி உள்ளும் புறமும் பொன்மயமான உண்மைப் பொருள்கள்பரந்துகிடக்கின்றனஎன்பவர்களின் வார்த்தையையுமகவனித்து க்கெடுதல்களையெல்லாம்நிவர்த்திசெய்து இந்த உண்மைப்பொருள்களை மாத்திரம் காப்பாற்றும்படியான மார்க்கத்தையும் கண்டுபிடிக்கவேண்டும். இந்த மார்க்கத்தை கண்டுபிடித்தால் அது இரண்டாவது படி. இன்னொரு முக்கிய விஷயம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. தன் எண்ணம் எப்படி இருக்கிறது. பொருளுக்காக ஆசைப்படாமலும், பெருமைக்காகவும் அதிகாரத்திற்காகவும் தாபம் அடையாமலும், உலகம் முழுமையும் கிளம்பி அமுக்கவேண்டுமென்று விரும்பினாலும் தன் கொள்கையின்படி உறுதியாய்நின்று வேலைசெய்யவும், அதற்குத் தேவை இன்னதென்றும் தெரிந்துகொள்ளவும் வேண்டும். தன் கடமையைச் செய்வதில் தன்உயிரே போய் விடக்கூடிய நிலையிலிருக்கும்போதுகூட தனியே நின்று செய்துமுடிக்கும் தைரியம்வேண்டும். இப்படி எல்லாம் இருக்க முடிந்தால் அவனே உபாத்தியாயன். ஆச்சாரியன். மனித வர்க்கத்தையே ரக்ஷிக்கத்தகுந்த தீரன். மகான். ஆனால்மனிதனுக்கு பொறுமை தீர்க்காலோசனை இவைகள் குறைவதும், ஆழ்ந்துபார்க்கும் சக்தி எட்டி எட்டிப்போவதும் காண்கிறோம். ஏனெனில் பலன் கைமேல் வேண்டுமென்கிறான். பலன்களையெல்லாம் தானே அடையவேண்டுமென நினைக்கிறான். அப்பொழுது பிறரைப் பற்றின கவலையை மறந்துவிடுகிறான். அப்பொழுது தன் கடமைகளைச் செய்துமுடிப்பதே தன்னுடைய கடமையென நினைப்பது அவன் நினைவிலிருந்து போய்விடுகிறது. இந்த சமயந்தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் உனக்கு வேலைசெய்ய பாத்தியதையுண்டு. பலன்கள் உனக்குச் சொந்தமல்ல என்று உபதேசிக்கிறான்.

தொடப்படாது, தூர நிற்கவேண்டும், எஜமானனைக்கண்டால் இடதி வேலியில் விழவேண்டும். தண்ணீர் தரமாட்டோம், உங்கள் பாழுங்கிணறு எப்பொழுதும் வற்றியே இருக்கும், எங்கள் பண்ணைத்தோட்டத்து வாரியில் குடம் போட்டு மொண்டால் தண்ணியாயாது. ஒரு குடத்துக்கு ஒரு காதம் கடந்து தான் தீரவேண்டும், நாற்று நட விடோம், களை பிடுங்கச் சேர்த்துக்கொள்ளமாட்டோம், அறுப்பு அறுக்க ஆள்சேர்ந்து விட்டது, காட்டில் சும்பு வெட்டு ஆளில்லாவிட்டால் கூப்பிடுகிறோம், தப்பித் தவறி மறினால் உதைத்துப் புரட்டி அழித்துவிடுவோம் என்னும் அகங்கார ஆக்ஞைகளுக்கு பாவம் ஏதாவது உண்டா? உண்டப்பா உண்டு. அந்த பாவந்தான், நம்மைக்கண்ட ராஜ்யமெல்லாம் 'கூலி' என்று விரட்டுவதும, நம் வீடெல்லாம இங்கிலீஷ மருந்து சீசாக்களும், நீரழிவும் க்ஷயமும் நிறைந்திருப்பதும, ஒரு பக்கம் இரண்டு வயிறு பலகாரத்தோடு சோறுபோட்டு வயிற்றைப் பெருக்கடித்து அதனால் குருட்டு நம்பிக்கையைப் பரப்புவதும், மற்ற பக்கம தண்ணீர் கூடக்கொடுக்காமல்வயிற்றை ஒட்டச்செய்து தேச பலத்தைக் குறைப்பதுவும் நம் மததர்மம். ஒருபக்கம் ஏராளமான மழை பெய்து ஊரைப் பாழ் பண்ணுவதும், மற்றோர்இடத்தில் மழையேயில்லாமல் எல்லாரையும் மடியவைப்பதுவும் காலத்தின் இயல்பு.

தற்கால இந்து சமூகம் ஆத்மார்த்த சாதகர் என்று நடிப்பவர்கட்கு சாதகமாய் அமைக்கப்பட்டுள்ளது. மற்றெல்லாரையும் பயங்கரமாய் நசுக்குவது என்ன? சொற்ப சந்தோஷத்தோடு கூடி உலகத்தில் கொஞ்ச சுகம் அனுபவிக்கப் பிரியப்படுகிறவர்கள் எங்கே செல்வர்? மதத்தின் பெயரால் மற்றவர்களை மிதித்தால் தான் தன் காரியம் கைகூடும். இந்த கொடுமை போகவேண்டுமானால் நம் மதத்தின் உண்மையான கொள்கைகளை தெரிந்து அவற்றை ஜனசமூகத்தாற்முன் செலுத்தவேண்டும். இதுதான் நாம் செய்யவேண்டியவேலை.

ஆடிமாதத்தோடு பிதுர்க்களுக்குக்கொடுக்கவேண்டிய ராமேசுவரக் கடனும் தீர்ந்தது. பிதிர்க்களுடைய கடன் தீர்ந்ததா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆனால், புரோக்கர்கள் புரோகிதர்கள் கொடுக்கவேண்டிய கடனைக்கொடுத்தும் வாங்கவேண்டிய பூமி லேவாதேவிகளைச் செய்தும் கடனைக் கட்டிக்கொண்டார்களென்பதும் பிரத்தியட்சம். பிதுக்கள் எங்குதான் இருக்கிறார்கள்? நரகத்திலா? சொர்க்கத்திலா? மறுபிறவியிலா? பஞ்சபூதத்துடன் கலந்து விட்டார்களா? இந்த நாலு பேருக்கும் ராமேசுவரக்கடன் எப்படி அவசியப்படும்? சொர்க்கத்தில் இருப்பவனுக்கு இங்கிருக்கும் எந்த வஸ்துவும் அவசியமில்லை. நகரதிலிருப்பவனுக்குப் போய்ச்சேராது. ஜென்மம் எடுத்தவனுக்கு தேவையில்லை. பூதத்தோடு பூதமானவனுக்கு எதுவும் அவசியம்மயில்லை. எல்லாப் பிதுர்களும் ஒன்றாய் எங்கோ இருப்பார்களென்று தான் புரோகிதன் ஒருவனுக்கு வைத்த பிண்டத்தை எட்டுபேருக்கும் ஒருவன் கை தர்ப்பை மோதிரத்தையும் தர்ப்பையையும் வாங்கி வாங்கி அதையே அநேகருக்குப்போடுகிறான். ஒரே மாட்டைத் தான் எல்லோரையும் வாலுருவச்சொல்லுகிறான். இதையெல்லாம் நினைத்துப்பார்த்தால் நல்லது கெட்டது தெரியவில்லையே. பயமும் முட்டாள்தனமும் இருக்கும்வரையில் புத்தி தெளிவடையாது. படைப்புப்போட்டு கும்பிடுவதும், ஆடிமாதம் கூரைக்குச்சோறு போடுவதும், பிதுர்க்களுடையகடனுக்கு வருடா வருடம் நாம் கொடுத்து வரும் சரியான வட்டி என்பது பூர்வ எட்டில் உள்ளது.

கனம் ரங்காச்சாரி அவர்கள் கோயம்புத்தூரில் செய்த பிரசங்கத்தில் 'நான் ஆஸ்திரேலியாவில் இருக்கும்போது எனக்கு பிராமணன் என்ற ஞாபகமே வரவில்லை. அதை அடியுடன் மறந்தேயிருந்தேன். அவ்வாறு மறந்திருந்தது நல்லதென்றே நினைத்தேன்' எனப்பேசினார். இங்கு வந்தவுடனும் அதே நினைவோடு அவரிருந்து இங்கிருக்கும் அச்சாரிகளுக்கும் அதையே உபதேசித்து அதன்வழியே அவர்களும் இருந்துவிட்டால் நாட்டில் கட்சிகளும், வகுப்புத்துவேஷங்களும் போக்கடிப்பதற்குப் பெரிதும் அஸ்திவாரமாக இருக்கும். பாப்பான் என்ற

## "திராவிடன்" பத்திரிகை.

கடந்த பத்து வருடங்களாக பிராமணரல்லாத தமிழர்களின் முன்னேற்றத்திற்கு இடைவிடாது உழைத்து வருவது அருமைத் "திராவிடன்" ஒன்றே என்பதில் சிறிதும் தடையில்லை. ஆனால் அது இப்போது குசேலரின் நிலையை அடைந்திருப்பது யாவருமறிந்த விஷயம். அதற்கென்ன காரணம்? தமிழ் மக்களுக்கென்று தனி ஊழியம் புரிபவர்க்கு துறையே தவிர வேறல்ல. ஆனால் தமிழர்கள் அவ்வளவு நன்றியற்றவர்களாவென்ற கேள்வி பிறக்காலாம். இதற்கு விடை ஆம் என்றும அல்லவென்றும் சொல்லிவிடலாம்.

சுமார் ஆறு கோடி தமிழ் மக்களிடையே நிலவி வரும் ஒரு சிறந்த தமிழ் நடையுள்ள—தமிழர் முன்னேற்றத்துக்கென்றே நடத்திவரும்—பத்திரிகைக்கு எவ்வளவுபேர் சந்தாதாரர்கள்? எவ்வளவு பேர் விளம்பரம் செய்பவர்கள்? இன்னும் எவ்வளவு பேர் சந்தா செலுத்துபவர்கள். எவ்வளவு பேர் படித்து விட்டு சந்தாவுக்கு வரும் வி.பி.யைத் திருப்பி நஷ்டம் செய்பவர்கள் என்பதை புள்ளி விபரம் போடுவோமானால் நமக்கு நமது சமூகத்தின் பேரிலும் பாஷையின் பேரிலும் உள்ள அபிமானம் விளங்கும். கடந்த பத்து வருடங்களாக பல கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் எதிர்ப்புகளுக்குமிடையே தனது உன்னத கொள்கையிலிருந்து ஒரு சிறிதும் மாறுபடாது ஊழியம் புரிந்து வருவது எல்லோரும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும் ஆனாலுமென்ன அதை அன்போடு ஆதரித்து வருபவர்களதிகமின்றி சீக்கிரம் நின்று விடுமோ என்று கூடப்பயப்படும் நிலைமையில் வந்திருக்கிறது. இதுவரை அதற்கு பொருளாலும் ஊழிய வகையாலும் உதவிசெய்து வருத எல்லோருக்கும தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். 'திராவிடன்' செய்த ஊழியம் அளவு கடந்தது அதன் எதிரிகளால் மறைக்கப்பட்டு நாமும் ஏமாற்றமடைந்து மோசம் போய் விட்டோம்.

### போனது போக.

அடுத்த செப்டம்பர் மாதத்துவக்கத்திலிருந்து "திராவிடன்" எப்படி கிருஷ்ண பரமாத்மா தரிசனத்தால் குசேலர் கிழப்பருவமும மிடிமையும் நீங்கி வாலிபமும் செல்வமும பெற்றாரோ அது போல வைக்கம வீரரும் "குடி அரசு" ஆசிரியருமாகிய உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை ஆசிரியராகப் பெறப் போகிற விஷயம் தமிழ் மக்கள் பத்திரிகை வாயிலாகத் தெரிந்திருக்கலாம்.

தற்கால ஆசிரியர் திரு மிகு. ஜனக சங்கர கண்ணப்பரைப் பற்றி வெகு நாளாய் அறிந்தவர்களுக்கு அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. அவர் பல நாள் ஆசிரியத் தொழிலிலமர்ந்து தேர்ச்சி பெற்றவர். அதோடு தமிழ் ஆங்கிலம் இரண்டும் நன்குணர்ந்தவர். தமிழர்களுக்கும் சமத்துவத்தைத் தேட உடல் பொருளாவி இவைகளை தத்தம் செய்பவராக இருப்பவர். இத்தகைய உண்மையாளரையும். அதோடு சுயமரியாதை என்ற ஒரு உணர்ச்சியையே மூலை முடுக்கு சந்து பொந்துகளிலும்கூட சதா உச்சரித்துக்கொண்டிருக்கும்படி பொதுவாக நமது மாகாணத்தையும் சிறப்பாக தமிழ் நாட்டையும் தயார் செய்வித்தவரும், பிராமணீயம் சூத்திரீயம் தீண்டாமை என்ற பிசாசுகளை சமத்துவம் என்னும் தெய்வத்தால் உதைத்து வருபவரும், பல நாட்களாக மூட வழக்கங்களாலீடுபட்டும் கட்டுக்கதை புராணங்களுக்கு அடிமை பட்டும் அடிமையென்னும் சாகரத்தில் மூழ்கிக்கிடந்த நம்மை "குடி அரசு" என்னும் தோணியால் கரையேற்றி மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வில்லை யென்னும் நீதியை நிலை நாட்டி வருபவருமான சமத்துவஞானி திரு. ராமசாமி நாயக்கர் அவர்களும் ஆசிரியர் பதவியை ஒப்புக்கொள்வாரேயாகில். "திராவிட"னுக்கு வந்த பெருமைதானென்னே. மற்ற பத்திரிகைகள், பொருமைப்படாதிருக்குமா? என்பதே சந்தேகம் தான்.

'குடி அரசு' பத்திரிகை பிறந்து இன்றைக்கு சுமார் இருபத்தெட்டுத்திங்களே ஆனபோதிலும், அது பரவாத இடமில்லை. பல வருடங்களாக நடந்து வரும் பத்திரிகைகளின் தொகையை விட அதிகமான சந்தாதார்களைப் பெற்று விட்டது. அதைப்படியாதார் எந்த வகுப்பிலும் இல்லை. சில கனவான்கள் உண்மையை வெறுத்து பிராமணர்களை திட்டுகிறதென்று சொல்லியபோதிலும், அடுத்த இதழ் வெளிவரும்வரை முந்தின இதழ் அக்கிரஹாரத்தில் தான் பிரயாணியாயிருந்து வருகிறதென்பது எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல பல உண்மையான பிராமணர்கள் "குடி அரசு" சொல்வது மிகவும் நியாயமென்றும் சொல்லி வருகிறார்கள்.

### ஆகவே.

அடுத்த மாதம் முதல் "திராவிடன்" புனர் ஜென்மமெடுத்தவனவானென்பதும், அரிய பெரிய விஷயங்கள் தாங்கி வருவானென்பதும் திண்ணமாய்த் தெரிகிறது. ஆகலால் இந்த சந்தர்ப்பத்தை தமிழர்கள் ஆதரித்து, தேசம் பாஷை சமூகம் இவைகளிலுள்ள பற்றுதலை வெளிக்காட்டவேண்டியது ஒவ்வொரு தமிழர் கடமையாயிருக்கிறது இதை நாம் மேடையிலும் திண்ணைக் கூட்டத்திலும் காட்டிவிட்டு வாளா இருப்போமேயானால் எத்தனை கண்ணப்பர் எத்தனை நாயக்கர் வந்தாலும் பழய குசேலர் குசேலர் தான். அதற்கு இடந்தராமல் உடனே எல்லோரும் சந்தாதாரர்களாகச் சேர்வதோடு விளம்பரங்கள் "திராவிடனுக்கே" கொடுப்பதென்ற விரதமும் கொள்ளவேண்டும். இந்த ஆண்டுக்குள் குறைந்தது ஐயாயிரம் பிரதியாவது வெளிவரச் செய்யுங்கள். அப்போது தான் நமது உணர்ச்சியை நாட்டாருக்குக்காட்டிக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். அதைவிட்டு, ஆ. ஆ. கண்ணப்பரா! அவர் அபாரமானவராச்சே ஓ. ஓ. நாயக்கரா! அவர் சிங்கமாச்சே எதற்கும் பயப்படாரே! இனி மேல் திராவிடன் பத்திரிகைஉலகத்தில் முதன்மை ஸ்தானம் பெறுமே! என்று ஆனந்தமடைந்து கொள்வதில் பிரயோசனம் இல்லை. ஆகையால் சகோதரர்களே! எழுங்கள் எழுங்கள் "நீங்களும் சந்தாதாராகுங்கள். உங்கள் நண்பர்களையும் சேர்த்துக்கொடுங்கள். நண்பர்களுக்கு நண்பர்களையும் சேரும்படி செய்யுங்கள்.

இந்த ஒரு காரியம் செய்யும் பக்ஷத்தில் சில மாதத்திற்குள் 'திராவிடன்' உருவம் இன்னும் பெரிதாவதுடன் அதிகப்பக்கங்களுடனும் வெளிவரக்காணலாம் 100க்கு 97 பேர்களுக்காக உழைக்கும் 'திராவிடன்' குசேலனாகவும் 100க்கு மூன்று பேருக் குழைக்கும் வேறு பத்திரிகைகள் குண்டோதரனாகவும் இருப்பானானால் யார் மனது தான் துடிக்காது? சந்தா மாதம் ஒரு ரூபா தானே! இது வெற்றிலைக்குப்போதுமா? அல்லது பொடிமட்டைக்குத்தான் போதுமா? அல்லது இரண்டு நண்பர்களுடன்வரும் போது ஒரு நாள் காப்பிக்குதான்போதுமா.

மாவிடித்தால் என்னவேணும் மண்வேணுமென்பார்கள். ஆகையால் இதைக்கண்ணுற்ற கனவான்கள் யாசகமாகவாகிலும் நினைத்து இன்றே திராவிடனை தருவியுங்கள். நமக்கு உறுதிதாக்கூடிய இந்த ஒன்றே செய்யுங்கள். ஒன்றும் நன்றே செய்யுங்கள் நன்றும் இன்றே செய்யுங்கள்.

திருப்பதி

---

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை, சுயராஜ்யம் வயிற்றுச்சோற்றுரிமை.

---

நினைத்துக் கொள்வதால் . உண்டாகும் கெடுதலும் பார்ப்பான் என்பதின் எண்ணத்தை விட்டுவிடுவதினால் உண்டாகும் நன்மையையும் மறைக்காமல் அவர் சொன்ன அளவுக்கு விசேஷமே. அனால் மேனாடு போகும் பார்ப்பனரெல்லாம் கப்பல் துரைமுகம் வந்திரங்கினவுடன் பார்ப்பாரப்போர்வையை எடுத்து மாட்டிக்கொள்வது தான் வழக்கம். மேனாட்டில் உண்டு, உடுத்துக் கூடிக் குலாவியிருக்கையில் இப்பார்ப்பார வேடத்தால் இந்த நன்மைகளை ஏன் விடவேண்டும். இந்தப் பார்ப்பார வேடத்தை எடுத்தெறிந்துவிடுவோம். பாமரர்கள் நிறைந்த நம் பார்ப்பார் நாட்டில் போய்ப் பார்த்துக்கொள்வோம் நம் பரம்பரை பாத்யதையை என்று நினைப்பதுவும் சகஜம்.

பார்ப்பான் தனது வருணாசிரமத்தின் அதிகத்தை எல்லாம் விட்டு விட்டு சுயராஜ்யப் பாதையில் ஈடுபட்டு சுயராஜ்யம் வாங்க ஒப்பமாட்டாரன். அந்த சுயராஜ்யம் அவர்களுக்குத்தேவையில்லை. எதற்காக தேசபக்தி என்று நடிக்கிறார்களோ அந்த அவசரங்களெல்லாம் திருப்தி செய்து கொண்ட பிறகு பின்னும் கொஞ்சம் நல்லெண்ணம் மிஞ்சி லோகோபகாரமாக அடிவெடுத்துவருமென்று அவர்களுடைய கூலியாட்களும் பெருமைக்குக் காத்திருப்பவர்களும் போகத்துமாக நம்பி இருப்பவர்களும் தங்கள் உழைப்பையெல்லாம் இவர்களுக்கு இழந்தோமேயென்று வருந்துவார்கள்.

# சுயமரியாதை.

(அரு. சோம சுந்தரன்)

ஒரு நாட்டு மக்கள் முன்னேறுதல் வேண்டுமானால் அவர்கள்பால் சுயமரியாதை உணர்வு செழித்தோங்குதல் வேண்டும். வாழ்வை மாசுபடுத்தும் அடிமைக் குணம் உளத்தினின்றும் ஒழிதல் வேண்டும். மக்கள் அனைவரும் சரி சமான மானவர் எனும் சமதர்மம் உதயமாகுதல் வேண்டும். நாட்டு மக்களனைவரும் ஒருவகை மக்களே; ஓரினத்தவரே என்னும் உயரிய எண்ணம் அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்று துளிர்த்தல் வேண்டும். பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுதலும் போலிச்சாதி வேற்றுமை பகர்தலும் அறவே அகலுதல் வேண்டும். இவ்வகுப்பார் தேவர், பூசுரர்; அவ்வகுப்பார் தீயர், அசுரர், சூத்திரர் எனும் இன்னோரன்ன பொய்யுரைகளை எவரும் மதித்தல் கூடாது. இத்தகைய பொய்யுரைகளும் புரட்டுத் தலபுராணங்களுமே இந்து மக்கள் வாழ்வைப் பாழ்படுத்திவிட்டன. பாழ்படுத்துகின்றன. இந்து மக்கள்பால் விரவியிருக்கும் போலி வேற்றுமைகளையும் அடிமை உணர்வையும் நினைக்குங்கால் நெஞ்சம் துடிக்கின்றது; இரத்தம் கொதிக்கின்றது; நரம்புகள் வீறுகொள்கின்றன! எத்தனை கோடி சாதிகள்! எத்தனை பிரிவுகளும் பிணக்குகளும்! எத்தனை உயர்வு தாழ்வுகள்! ஒவ்வொன்றிற்கும் எத்தனை புராணங்கள்! ஒரு வகுப்பார் தாமே பூதேவரென்றும் இறைவன் முகத்தினின்று எழுந்த நளியவரென்றும் இறும்பூதெய்துகின்றார் மற்றொருவர் இந்திர குலத்தினரென்று மகிழ்கின்றார். வேறொருவர் சந்திர குலத்தினரெனச் சாற்றுகின்றார். இவர் தம் தந்திர உரைகளை ஆராயுங்காலத்துப் பெருநகைப்பே உண்டாகின்றது. எரியும் நெருப்பினிடையே அடித்துக்கொண்டிருக்கும் புழுக்கணம் போல் தன்னுணர்வும் தன் மரியாதையுமின்றி வாழும் மீளா அடிமை மக்கள் போலிப்பெருமை பேசி மகிழ்வதை என்னென்றியம்புவது? அரசியல் சுதந்திரமின்றி மக்களனைவரும் பிரிட்டானியத்திற்கு அடிமைப்பட்டிருக்கின்றனர். மூட வைதிகக்கட்டுப்பாடுகளால் பார்ப்பனீயத்திற்குப் பலரும் அடிமைப்பட்டிருக்கின்றனர். இந்து மக்களில் படிப்படியாக ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினருக்கு அடிமைப்பட்டிருத்தல் கண்கூடு. சாதி இந்துக்கள் அனைவரும் ஆதிதிராவிடரை ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஆண் குலம் பெண் குலத்தைப் பேரடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அரசியல் சமயம் சமூகம் ஆகிய மூன்று துறைகளிலும் நம்மக்கள் அடிமைத் தளையினால் பிணிக்கப்பட்டுப் பரிதபிக்கின்றனர். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! சமயச்சார்பிலும் சமூகச்சார்பிலும் நமது பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருக்கொத்த அடிமைகளாக விளங்குதலை நோக்குங்காலத்து மனம் பெரிதும் சோம்புகின்றது. பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை உணர்ச்சியின்றித் தம்மைத்தாமே பிறப்பால் இழிந்தவரென எண்ணிக்கொள்ளும் வண்ணம் பார்ப்பனர் உபதேசஞ் செய்து வைத்திருக்கின்றனர். ஒரு குலத்திற்கு ஒரு நீதி உரைக்கும் பார்ப்பன நூல்கள் பலவும் அன்னாரை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியுமே பேசுகின்றன. வைதிகப் பார்ப்பனர் இன்றும் தாம் உயர்ந்தவரென இறுமாப்புடன் பேசியும் எழுதியும் வருகின்றார். தமது வகுப்பினரல்லாத பிற வகுப்பினர் அனைவரையும் சூத்திரரென இழிவு செய்கின்றார். சூத்திரனெனும் சொல்லுக்கு வேசை மக்களென்பது பொருளாகும். நாட்டு மக்களனைவரும் வேசை மக்களா? அந்தோ! கொடுமை! கொடுமை!! சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் இதனைக் கேட்டுக்கொண்டிருத்தல் நன்றோ? பார்ப்பனர் பிரமன் முகத்திலும், அல்லாதார் அவன் காலிலும் தோன்றினரெனப் பார்ப்பனர் எழுதிய பொய்ப் புராணங்கள் இழிவு கூறுகின்றன. முகத்திலும் காலிலும் பிறத்தல் விந்தையேயன்றோ? அன்னை வயிற்றில் கருத்தரித்து மக்கள் எவ்வாறு பிறக்கின்றனரெனபது அனைவரும் அறிந்ததே. மூடபக்தியால் பார்ப்பனரைத் தெய்வமென்று கருதி மயங்குகின்றனர். ஐந்து வயதுள்ள பார்ப்பனச்சிறுவனை ஐம்பது வயதுள்ள பார்ப்பனரல்லாத பெரியவர் அடிபணிந்து வணங்குகின்றார். 'தீர்க்காயுளாயிருக்கக் கடவாய்' என்று அவன் அவரை ஆசீர்வதிக்கிறான். என்ன விந்தை! பிறர் தம்மைக் கும்பிடுங்காலத்து வைதிகப் பார்ப்பனர் இடது கையைத் தூக்கி, பிறர் பிறப்பு நோக்கி எள்ளிநகையாடி இழிவு கூறுவது போல் ஆசீர்வதிக்கின்றனர். ஒருவர் கும்பிடுங்காலத்து மற்றொருவரும் திருப்பிக் கும்பிடுவதே முறையாகும். அதுவே சுயமரியாதைக்கு அழகு. எனவே அன்னோர் இடதுகையால் ஆசீர்வதிக்குங் காலத்து சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் தாமும் அவ்வாறே இடதுகையைத் தூக்கி ஆசீர்வதிப்பதே தக்கதாகும்.

பார்ப்பனரைப் பலர், "சுவாமி" என்று அழைக்கின்றனர். மோட்டார் ஓட்டுபவரை டிரைவர்சாமியென்றும், பலகாரக்கடைக்காரரைக் காப்பிக்கிளப்சாமியென்றும், வக்கீலை வக்கீல்சாமியென்றும், ஆசிரியரை வாத்தியார்சாமியென்றும், அழைக்கின்றனர். இவ்வாறு எத்தொழிலுடையோரையும் அத்தொழிற் பெயரைக் குறித்துச் சாமியென அழைக்கின்றனர். ஒருகால் உயர்வுடைய தெய்வங்களைச் சாமியென அழைத்து, அவ்வாயினாலேயே இவ்வசாமிகளைச் சாமியென அழைப்பது எவ்வாறு பொருந்தும்? சுவாமிக்குரிய குணங்களில் இம்மனுச்சாமிகளிடத்தில் என்ன இருக்கின்றன? நாம் அவர்களைச் சாமியென்று உயர்வு நவிற்சியாக அழைத்தலாலேயே அவர்கள் நம்மைச் சூத்திரரென இழிவு செய்கிறார்கள். மேலும் வைதிகர் சிலர் "அவன், இவன், செட்டி, நாயுடு" என்று ஏகவசனத்தில் பேசுகின்றனர். சில பார்ப்பனர் பார்ப்பனரல்லாத பெரியவரைச் சந்திக்குங்காலத்தில் கூட "நாராயணா, சுப்பய்யா, என்னடா அப்பா! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்" என்று தாழ்வுடன் பேசுகின்றனர். இதைக் கேட்டுக்கொண்டு வாளாவிருத்தல் பெரிதும் வெட்கமே! "வா, போ, இரு," என ஏக வசனத்தில் பேசும் பார்ப்பனரைச் 'சுவாமி'யென்றழைப்பது எவ்வளவு வெட்கம்! எனவே சுயமரியாதையுடைய பார்ப்பனரல்லாதார் இனிப் பார்ப்பனரை அழைக்குங்காலத்து வயது முறைக்கு ஏற்றவாறு பாலனாயிருந்தால் அடேயென்றும், இளைஞனாயிருந்தால் அப்பா என்றும், பெரியவராயிருந்தால் ஐயாவென்றும் முறையே அழைத்தல் வேண்டும். பார்ப்பனச் சிறுவர்களைக் கூடப் பார்ப்பனரல்லாத பெரியவர் பலர் பிராமண வித்தென்று கருதி 'சுவாமி சுவாமி' என்று கூப்பிடுவது சுயமரியாதைக்கு அழகன்று. சாதாரண மனிதரான பார்ப்பனரைச் சுயம்பாகிச் சாமியென்றும், பட்டர் சாமியென்றும், கிளார்க் சாமியென்றும் கூப்பிடுவது வேடிக்கையான செயலாகும். இனிமேல் எவரும் எம்மனிதரையும் 'சுவாமி' என்றழையாது 'ஐயா' என்றே அழைத்தல் வேண்டும்.

சில வைதிகப் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் இல்லங்களுக்கு யாசகத்தின் பொருட்டும், வேறு காரியங்களின் பொருட்டும் வரும்பொழுது சுயமரியாதைக்கு இழிவு ஏற்படும் வகையில் சில அசம்பாவிதமான முறைகளை அனுஷ்டிக்கின்றனர். இல்லத்திற்கு உரிய பார்ப்பனரல்லாத தலைவர் கீழே உட்கார்ந்து கொண்டிருக்குங்காலத்து வருகின்ற வைதிகரும் தேசாந்திரிகளும் அனுமதி இன்றித் தாமாகவே உயர்ந்த ஆசனங்களில் அமர்ந்து விடுகின்றனர். தெய்வத்தின் பிரதிநிதிபோல் அக்ஷதை எடுத்து ஆசீர்வதிக்க ஆரம்பிக்கின்றனர். இவ்வாறு இறுமாப்புடன் வைதிகப்பார்ப்பனர் தாம் உயர்ந்தவரென எண்ணிக்கொண்டு உயர்ந்த ஆசனங்களில் அமர்வதைச் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் அனைவரும் அறவே கண்டித்துச் சமமான ஆசனத்திலிருக்கும்படி செய்யவேண்டும். பார்ப்பனரல்லாதார் யாரும் பார்ப்பனர் வந்தவுடன் பயபக்தியுடன் "சுவாமி மேலே இருங்கள்" என்று பிரார்த்தித்துக்கொள்ளாது ஐயா இப்படி இரும் என்று ஒழுங்கான முறையில் அமரும்படி செய்தல் வேண்டும். ஆசீர்வதித்து அக்ஷதை தரும் தேவப்பிராமணரை யாரும் மதித்தல் கூடாது. ஏனெனில் அவர்கள் தாம் தெய்வப்பிறப்பினர் என இறுமாப்புக் கொண்டிருக்கின்றனர். அவர்களிற் சிலர் வீட்டிற்குள் வருகின்றபொழுதே யாரும் கும்பிடாமலிருக்கும் நிலையில் தாமே இடதுகையைத் தூக்கி ஆசீர்வதித்துக் கொண்டுவருவது வழக்கம். தாமாக ஆசீர்வதிப்பது விந்தையே. அதனினும் இடதுகையைத் தூக்கி ஆசீர்வதிப்பது நம்மக்களைப் பெரிதும் இழிவு செய்வது போல இருக்கிறது. இருகையாலும் கும்பிடுவதே முறை. அல்லது [illegible] விடுத்து ஆசீர்வதிப்பது கேலி செய்வதே. வலதுகையை விடுத்து இடதுகையால் ஏன் ஆசீர்வதிக்கவேண்டும் என்று கேட்டால் சில வைதிகப்பார்ப்பனர், "இரண்டு கையாலும் கும்பிட்டால் நீங்கள் எரிந்து

சாம்பாராய்ப் போவீர். எங்கள் வலதுகையில் நெருப்பு இருக்கிறது" என்று விந்தையான பதில் அளிக்கின்றனர். நெருப்பு நிறைந்த பார்ப்பனரது வலதுகை எரிந்து போகமால் இருப்பது ஆச்சரியமே. உண்மையாகவே நெருப்பு இருக்குமானால் பார்ப்பனர் வீட்டிற்கு நெருப்புக் குச்சிப் தேவையில்லை. முழு பக்தியுடன் இப்போலி வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்தகாலம் மலை ஏறிவிட்டது. ஆதலால் பிராமணர் கண்விழித்துக் கொண்டு இடதுகையைக் குறுக்கிக் கொள்ளும் ஆசீர்வாதத்தை நிறுத்தி இருகையாலும் கும்பிடப்பழகுவதே தக்கதாகும். பார்ப்பனரல்லாதார் வீட்டிற்கு வரும்பொழுது பார்ப்பனரிற் சிலர் பக்கத்தில் சிறு பிள்ளை நின்றாலுங்கூட "என்னைத் தொட்டுடாதே! தொட்டுடாதே! எட்டு எட்டு" என்று அலறி விலகி ஓடுகின்றனர். பார்ப்பனரல்லாதார் வீட்டுப்பாயைத் தொட்டு அதன் மீது உட்கார்ந்தால் தீட்டு ஒட்டிக்கொண்டு வந்து விடும் என எண்ணிக் கொண்டு, கால்களைத் தூக்கித் தவ்வித் தவ்வி அப்புறமாகத் திண்ணைமீது அமர்கின்றனர். உண்மையை நோக்கினுல் வைதிகரிற் சிலர் நமது பாயைத் தொடுவதற்கு அருகதை உடையவரல்லர். ஏனெனில் அவர்களுடைய அழுக்கு வேஷ்டியும் அழுக்குக்காலும் நமது பாயில் படிந்தால் பாய் அசுத்தமாகி விடும். அவர்கள் நம்மிடத்தில் ஒரு பொருளைத் தருவதாக இருந்தால் நமது கையைத் தொட்டுவிடாமல் ஜாக்கிரதையாக வீசி எறிகின்றனர். என்ன கொடுமை! மகாத்மா காந்தியினிடம் ஒரு வைதிகப்பார்ப்பனர் வந்தனோபசாரப்பத்திரத்தை வீசி எறிந்தது ஞாபகத்திற்கு வருகிறது. கோயில்களிலும் மடங்களிலும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாருக்கு தீர்த்தம் விபூதி பிரசாதம் ஆகியவைகளை அளிக்கும் பொழுது தீண்டத்தகாதவராகப் பாவித்து வீசி எறிவது வருத்தம் தாக்கக்கதே. இவ்வாறு பார்ப்பனரல்லாதாரனைவரையும் தீண்டத்தகாதவராக மதித்துச் சுயமரியாதையற்ற முறையில் பார்ப்பனர் நடத்துவதை நம் மக்கள் கவனித்துச் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும். பார்ப்பனத் தபால்காரன் கூடத்தபாலை எறிவது விநோதமே. இவ்வாறு வீசி எறிவோரை அவசியம் கண்டித்தல் வேண்டும். பார்ப்பனர் குருவாகிய சங்கராச்சாரியாரொருவர் பிரசாதத்தைத் தனது கையால் பார்ப்பனரல்லாதாருக்கு வீசி எறிந்தால் கூட தீட்டு வந்துவிடுமென்று வேறொரு பார்ப்பனன் கையில் கொடுத்து வீசி எறியச்சொல்லுகின்றார்.

பார்ப்பனர் இல்லங்களில் பார்ப்பனரல்லாத நண்பர் சென்று தண்ணீர் கேட்டால் வேறொரு தனிப் பானையிலுள்ளதைக் கொடுக்கின்றனர். சாப்பிட்டவுடன் லோட்டாவைக் கீழே வைக்கச் சொல்லி அதைத் தண்ணீர் தெளித்துக் கழுவித் தீட்டினைப் போக்கி எடுத்துச் செல்கின்றனர் சுண்ணாம்பு முதலிய வேறு சில பதார்த்தங் கேட்டால் சேஷமாகிப் போய் விடுமென்று கொடுக்கமாட்டோமென்கின்றனர். அவர் சாப்பிடு முன்னும், சாப்பிடும் பொழுதும் வேறொரு பார்ப்பனரல்லாத நண்பருக்குச் சோறு போட்டால்சேஷமாய்விடு மென்று மறுக்கின்றனர். சாப்பிட்ட பின் மீதத்தைப் போடுகின்றனர். அவர்கள் சாப்பிடும் பொழுது பார்ப்பனரல்லாதார் பார்த்துவிட்டால் தீட்டாய்ப் போய் விடுமென்கின்றனர். அகஸ்மாத்தாக யாராவது பார்த்து விட்டால், சாப்பிட்டதை அப்படியே வைத்து விட்டு எழுந்து விடுகின்றனர். பார்த்தவரைக் கண்டிக்கின்றனர். கோயிலில் பிரசாதம் வழங்கும்பொழுது பார்ப்பனருக்குக் கொடுத்து விட்டே பிறருக்குக் கொடுக்கின்றனர் அவர்கள் இல்லங்களில் திதி முதலியவிசேடங்கள் நடக்கும் பொழுது, நாள் முழுதும் பார்ப்பனரல்லாதாரோடு பேசுவதில்லை. பேசினுல் பிராமணரைத் தொட்டுவிட்டால், கோபித்து விட்டுப் பின்வீட்டுக்குப்போய்த் தீட்டுத் தொலையும் பொருட்டுக்குளிக்கின்றனர். காப்பிக் கிளப்புகளில் தனி இடத்தில் இருந்து மறைவாகப் புசிக்கின்றனர். பார்ப்பனக் கிளப்புகளில் பார்ப்பனரல்லாதாருக்கு வேற்றிடத்திலேயே உணவு அளிக்கப் படுகிறது. பார்ப்பனரிற் சிலர் பொது இடங்களில் தண்ணீர் குடிக்கும் பொழுது, பார்ப்பனரல்லாதார் பார்த்துவிடாதபடி வேஷ்டியை மறைத்து வைத்துக் கொண்டு சாப்பிடுகின்றனர். பொது ஊருணிகளில் பார்ப்பனர் குளிக்கும் துறைகளில் பார்ப்பனரல்லாதார் இறங்கக்கூடாதென்கின்றனர். சில கிணறுகளில் பார்ப்பனரல்லாதார் தண்ணீர் இறைக்கவிடப் படுவதில்லை. வேதத்தையும் பார்ப்பனரல்லாதார் காதிலுங் கேட்கக்கூடாதென்கின்றனர். சில பிடிவாத குணமுள்ள வைதிகரிருக்கும் வேத பாடசாலைகளில் மழைக்குக்கூட ஒதுங்கப் பார்ப்பனரல்லாதாருக்கு இடங்கிடைப்பதில்லை.

என்ன கொடுமை! என்ன கொடுமை! இவ்வாறு பார்ப்பனரல்லாதார் அவமதிக்கப்படுதல் சுயமரியாதைக்கு அழகாகுமோ? எதை இழந்தாலும் இழக்கலாம். சுயமரியாதையை இழப்பது எட்டுணையும் பொருதம் உடையதன்று. நம்மையும் நமது பொருள்களையும் தொட்டால் தீட்டு வருமென்று கூறும் வைதிகப் பார்ப்பனரும் குருமார்களும்நமது காசுக்கு மட்டும் பேராசைப்படுவது விந்தையேயன்றோ? பார்ப்பனரல்லாதார், உணர்வில்லாதவர், சுயமரியாதையற்ற அடிமைகள் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே வைதிகர்கள் இதுகாறும் இழிவு செய்து ஏமாற்றி வந்திருக்கின்றனர். இப்பொழுது சுயமரியாதை உதயமாகிவிட்டபடியால் இனி அவர்களுடைய ஏமாற்றம் பலிக்காது. "குமரன்"

## பிராமணீயம் ஒழிந்த சடங்கு

இராமனாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா நெடுவயல் பாளையப்பட்டு கட்டுக்குடிப் பட்டி யென்னும் கிராமத்தில் திரு ரா. ம. முத்தளகுபிள்ளையவர்கள் தமது மனைவி காகம்மாளின் இறந்த தினச் சடங்கை பிராமணரில்லாமல் தமதுபந்துக்களைக்கொண்டு ஏனிது ஆவணி மீ 4 உ யன்று சிறப்பாக நடத்தினரென்று திரு அள. அருணாசலம் பிள்ளை எழுதுகிறார்.

## ஏளாயிரம் பண்ணை.

இவ்வூர் வாலிப நாடார் சங்க மூன்றாவது ஆண்டு விழா குறித்தபடி வெள்ளியன்று நடைபெற்றது அன்று காலையில் சாத்தூர் ஸ்டேஷனில் சங்கத்தின் அங்கத்தினர் பலர் எதிர்கொள்ள திரு செ. முருகப்ப செட்டியாரவர்கள் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் வந்துசேர்ந்தார்கள். உடனே மோட்டாரில் அழைத்து வரப்பெற்றார்கள். ஊர்வலத்தில் கடைகள் தோறும ஏராளமான பூமாலைகள் அணிவிக்கப்பெற்றன. மாலையில் மாரியம்மன் கோயில் முன் மண்டபத்தில் கூட்டம் கூடியது. சுமார் 600 ஜனங்கள் கூடியிருந்தனர், கதர், நாடார்களின் கடமை தீண்டாமை விலக்கு, ஜீவகாருண்யம், என்னும் விஷயங்களை உபந்யசித்தார்கள். தலைவரது தக்க முடிவுரையுடன் இரவு 10-மணிக்கு சபை இனிது முடிவு பெற்றது. காலை 5ந்து மணி வண்டியில் திரு செட்டியாரவர்கள் மீண்டும் குற்றாலம் சென்றார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார். "குமரன்"

## பரிதாபம்!

### ஆதித்திராவிடரும் தண்ணீர்ப்பஞ்சமும்.

பவானி தாலூக்கா அந்தியூருக்கடுத்த புதுப்பாளையத்தில் சுமார் 40 வீட்டுக்காரர் ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குடி தண்ணீரில்லாமல் கோட்டம் கோட்டமாய் ஓடி இறைக்கும கிணறுபார்த்து தண்ணீருக்குப் போனால் ஒரு குடந்தண்ணீருக்கு பெருநேரமாய் அந்தோட்டத்திலுள்ள வேலைகளைச் செய்யவேண்டும். இல்லையேல் தண்ணீருக்குக் கொண்டுவந்த மண்குடமோ செப்புக்குடமோ எதுவாயிருந்தாலும் உடைந்து நாசமாக இருக்கும. இவர்கள் பனைமரத்தின் பட்டையைக் கொண்டுவந்து வடக்கயிறுகள் பின்னி சந்தைகள் தோறும் விற்று ஜீவிக்கிறவர்கள். இவர்களுக்கு தண்ணீர்த் தடையினால் மேல்கண்ட வேலைகள் அநேகமாகத்தவறிப்பட்டினிகிடந்து பரிதபிக்கிறார். இவர்கள் ஒருகுடந்தண்ணீருக்கே பெருத்த அடிமைகளாக இருந்தால் தேகங்களைக் கழுவிக் கொள்ளவும் துணிகளை துவைத்துக் கொள்ளவும் எங்ஙனம்முடியும். ஆதித்திராவிடர்கள் சுத்தமாக இருக்கவேண்டும, தினம் குளிப்பும் துவைப்புமு இருக்க வேண்டும் என்று மகாநாடுகள்தோறும் பேசிவந்தால் இம்மாதிரி நிலைமைக்காரர்கள் என்ன செய்வார்கள். இவர்கள் தண்ணீரில்லாத குறைகளை தாலுக்கா போர்டுகளும் கவர்மெண்டாருக்கும் மனுப் பண்ணியும் கவனிக்கப்படாமலிருக்கிறது. இவ்வூரில் வருஷத்தில் ஒருதடவை குருநாத ஸ்வாமி திருவிழாவில் இவர்கள் வீட்டுக்குவந்த உறவுமுறையாரும் இவர்களும் தண்ணீருக்குப் படும் கஷ்டத்தை கடவுள்தான் அறிவார். இனியாகிலும் போர்டார் தண்ணீர்ப் பஞ்சத்தை நிவர்த்திப்பார்களென்று நம்புகிறோம் என்று இவர்கள் துக்கத்தை நேரில் அறிந்த பெருந்தலையூர் திரு. கெ. எம். தானியேல் மேஸ்திரி எழுதுகிறார்.

# விருதுபட்டியில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் உபன்யாசம்.

ஸ்ரீமான் நாயக்கர் குற்றாலத்திற்குப் போகிற வழியில் விருதுபட்டியில் சில கனவான்களின் வேண்டுகோளின் பேரில் விருதுபட்டி பாண்டியன் மைதானத்தில் 'தற்காலநிலை' யென்னும் தலைப்பின்கீழ் 'அரசியலும் சமூகஇயலும்' என்பது பற்றி ஒரு சிறு உபன்யாசம் ஸ்ரீமான் ராமசாமி நாடார் அவர்கள் தலைமையில் செய்தார். அதன் சாரமாவது:—

கனவான்களே!

அரசியலும் சமூக இயலும் என்பது பற்றி எனது அபிப்பிராயங்களை பத்திரிகைமூலம் தெரிந்திருப்பீர்கள். அதாவது, அரசியல் வேறு சமூக இயல் வேறு என்பதாக இரண்டு தனித்தனி இயல்கள் கிடையாது. இவ்விரண்டும் வேறுவேறாகத் தனிப்படுத்தக் கூடிய விஷயமல்ல. அரசியல் என்றாலும் சமூக இயல் என்றாலும் இரண்டும் ஒரு நாட்டின் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தானேயல்லாமல் வேறு காரியத்திற்கல்ல. எனவே ஒரு நாட்டின் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு என்று வைத்துக்கொண்டு அரசியல் என்றால் அதில் சமூகமுன்னேற்றம் இல்லாமலிருக்க முடியாது. அதுபோலவே சமூக இயல என்றாலும் அரசியல் முன்னேற்றம் அதில் இல்லாமலிருக்க முடியாது. இரண்டும் தனித்தனி பிரிக்கப்படாத தன்மையுடையது. நமது நாட்டில் இப்போது இவ்விரண்டும வேறுவேறாக காணப்படுவதின் காரணம் உண்மையான அரசியல் தொண்டும் உண்மையான சமூக இயல் தொண்டும் இல்லாமல் வெறும் வேஷத்தில் பாமரமக்களை எய்த்து, சிலர் தங்கள் சுயநலத்தை வளர்க்கவும் பாடுபடுவதினால், அதாவது நம்நாட்டு பெரும்பாலும் படித்தவர்கள் என்போர்களான பார்ப்பனர்கள் ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகம் சம்பாதிக்கப் பாடுபடுவது அரசியலாகவும், ஆங்கிலம் படிக்காமல் ஆரியம் படித்துவிட்டு வயிறு வளர்க்க புரோகிதத் தொழிலை பரப்புவது சமூக இயலாகவும் மதிக்கப்பட்டு வருகிறது. எனவே இவ்விரண்டு காரியங்களும் நாட்டு முன்னேற்றத்திற்கான அரசியலும ஆகாது, சமூக இயலும் ஆய்விடாது.

உதாரணமாக, மகாத்மா காந்தி அரசியலில் அதாவது காங்கிரசில் ஈடுபட்டிருந்த காலத்தில் அரசியல் என்பதின் பேரால் அவர் ஏற்படுத்தின திட்டமாகிய நிர்மாணத் திட்டத்தையும் பஹிஷ்கார திட்டத்தையும் கவனித்துப் பார்த்தால் என்ன என்ன விஷயம் சேர்ந்தால் அரசியல் ஆகும் என்பது புலப்படும்.


அதாவது நிர்மாணத் திட்டத்தில் எல்லா மக்கள் வயிற்றுக்கும் பிழைப்பும் பணமும் சம்பாதிக்க "பொருளியல்" ஆன கதரும், எல்லோரும் சமத்துவமடைய தீண்டாமை விலக்கு என்னும் "சமத்துவ இயலும்" மனிதர்களின் ஒழுக்கம் சீர்படுவதற்காக மதுவிலக்கு என்னும் "ஒழுக்க இயலும்" எல்லா மதஸ்தர்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும் சகிப்புத் தன்மையாகவும் இருக்கவேண்டும் என்பதாக 'இந்து முஸ்லீம் ஒற்றுமை' என்னும் பரஸ்பர "அன்பு இயலும்" ஆகிய இவைகள்சேர்ந்ததை நிர்மாணத் திட்டமாகவும், ஆட்சி சம்பாதப்பட்டவரை, அதை ஒழுங்குபடுத்தி மேற்கண்ட நிர்மாண திட்டத்திற்கு அனுகூலமாய் ஆட்சி புரியும்படி செய்வதற்காக மட்டும் அனுகூலமாய் இருக்கும்படி செய்ய, அதுவரையில் அதனோடு கூடுமான வழிகளிலெல்லாம் ஒத்துழைக்காமலிருக்கவேண்டும் என்பதாகக்கொண்டு, அரசாங்கத்துள் நமக்குள்ள ஒவ்வொரு சம்பந்தத்தி லிருந்தும் விலகுவதற்காக பஹிஷ்கார திட்டம் என்பதாகவும் ஏற்பாடு செய்திருந்ததே ஒழிய வேறில்லை.

மற்றபடி நமதுநாட்டு பழயகால சரித்திரத்தில் இம்மாதிரி அரசியல் என்பதாக ஒன்று இருந்ததாகவே காணமுடியாது. மக்களுக்கும் அரசர்களுக்கும் அபிப்பிராயபேதமோ, அரசாங்க சுதந்திரத்திற்கு என்பதாக மக்கள் அரசாங்கத்துடன் போராடியதாகவோ, அதற்காக ஒரு இயக்கம் இருந்ததாகவோ எந்த இடத்திலும காணமுடியாது. சரித்திரத்தில் பார்க்கும் அரச தர்பாரில் அரசன் மக்களுக்காக வாழ்ந்து வந்ததும், மக்கள் அரசருக்கு முடி சூட்டினதுமாக காணப்படுமே ஒழிய வேறில்லை. அது ஒரு தனி ஜாதியாகவோ அல்லது ஒரு தனி வகுப்பாகவோ இருந்ததாகக் கூட காணமுடியாது. ஏதாவது ஒரு இடத்தில் குடிகள் அரசனிடம் முறையிட்டதாக பார்ப்போமானால், அது காட்டு மிருகங்கள் வந்து வெள்ளாண்மைகளை அழித்ததற்காகவும், வேறு ஏதோ திருடர்களோ ராக்ஷதர்களோ வந்து குடிகளை இம்சித்ததாகவும் காணப்படுமே ஒழிய வேறு ஆட்சிமுறையைப்பற்றி குற்றம் காணவே முடியாது. இப்பொழுது நமது கண்களுக்கு நமது நாடு ஆட்சிமுறை குற்றம் சொல்லப்படுவதாய்க் காண்பதெல்லாம் மேல்காட்டிய நிர்மாணத் திட்டத்தில் நமக்குள்ள குற்றங்களே ஒழிய ஆட்சிக்குற்றமே அல்ல. ஒரு நாடோ அல்லது ஒரு சமூகமோ தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் பரஸ்பர அன்பும் இல்லாமல் ஒருவரை ஒருவர் கொடுமைப் படுத்தி மனிதத் தன்மைக்கு விரோதமாய் வாழும்போது, எப்படியானாலும் அன்னியன் யாராவது ஒருவன் உள்ளே பிரவேசித்து ஆதிக்கம் பெற்றுக் கொள்ளத்தான் முடியுமே ஒழிய வீணாய்க் கிடக்க முடியவே முடியாது. இந்த நிலையில் வந்த கொடுமையான ஆட்சிமுறையானது இந்நிலைகள் சரிப்படுத்தப் பட்டாலொழிய ஒழிக்கப்படவே முடியாது என்பதை கண்டிப்பாய் கவனத்தில் வைக்கவேண்டும். ஏதாவது ஒரு கொடுமையை ஒழிக்கவேண்டுமானால் அக்கொடுமைக்கு உள்ள ஆஸ்பதமான காரியம் எதுவோ அதை ஒழித்தால்தான் அக்கொடுமை வளராமலிருக்கமுடியுமே யல்லாமல் மேலுக்குமேலாகப் பார்ப்பதால் அது அடியோடு ஒழிக்கப்படவே மாட்டாது. உதாரணமாக நமக்கு தலைவலி ஏற்பட்டிருக்குமானால், அத்தலைவலி வருவதற்கு நமது சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் கோளாறு என்ன? அதற்கு நாம எப்படி நடந்து கொள்ளவேண்டும்? எந்தமாதிரி பத்தியமாயிருக்கவேண்டும்? என்னமாதிரிமருந்து சாப்பிடவேண்டும்? என்பதாக கவனித்து கண்டுபிடித்து அந்தப்படி நடந்து வரவேண்டுமே யல்லாமல் அப்போதைக்கப்போது ஒரு பத்துப் போடவோ அல்லது ஒரு தைலத்தைப் பூசவோ செய்தால் எப்படி வியாதி போகும் என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். அரசியல் என்கிற பேரால் இதுசமயம் நமது நாட்டில் ஒரு கூட்டத்தாரால் நடத்தப் பட்டுவரும் ஒருவித கிளர்ச்சி சிலரின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதே தவிர நாட்டுக்கோ நாட்டிலுள்ள மக்களுக்கோ பொதுவாக அதில் ஒருவித நன்மையும் இல்லாததோடு நாட்டுக்கும் மக்களுக்கும் பெரிய தீமையை உண்டாக்கிவருவதாகவே இருக்கிறது.

முதலாவது நமக்குள் ஒருவித ஒற்றுமை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அதற்காகவே பாடுபடவேண்டும். உண்மையான ஒற்றுமை ஏற்படவேண்டுமானால் அதற்கு இடையூறாய் உள்ளவைகளையெல்லாம் ஒழிக்கவேண்டும். நமது நாட்டில் ஒற்றுமைக்குறைவு என்பது ஒரு தேசத்தாருக்கு ஒரு தேசத்தார் என்கிற முறையில்மாத்திரம் இல்லை. ஒரு மதஸ்தருக்கு மற்றொரு மதஸ்தர் என்கிற முறையில் மாத்திரம் இல்லை. நம்மைப் பொருத்தவரை, அதாவது இங்கு கூடியுள்ள பெரும்பான்மைமக்களைப் பொருத்தவரை ஒரு மதஸ்தர் (இந்துக்கள) என்பவர்களுக்குள்ளாகவே அநேகவிதமான கொடுமையும் ஒற்றுமைக் குறைவும் இருந்துவருகிறது. இந்தமத தத்துவமே நமது நாட்டை இந்த தாழ்ந்த கதிக்கு கொண்டு வந்தது என்பதே நமது கெட்டியான அபிப்பிராயம். மக்கள் அறிவையும் ஆற்றலையும் அன்பையும் மனிததர்மத்தையும் நமதுமதம் என்றுசொல்லுவதே அழித்துக்கொண்டுவருகிறது.

முதலாவதாக-நமதுநாட்டில் மக்களை பிறவியிலேயே உயர்வு தாழ்வு கற்பித்து,ஒன்றுக்கொன்று ஒன்றுசேரவிடாமல தடுத்து,எவ்வளவு அயோக்கியனுயிருந்தாலும் ஒருவகுப்பு தாய்வயிற்றில் பிறந்ததற்காக மாத்திரம் உயர்ந்தவன் என்றும், மற்றெல்லோரும் அவனைத் தொழவேண்டியவர்கள் என்றும், ஆக்கி வைத்திருக்கிறது. அதுபோலவே மற்றொருவன் எவ்வளவு யோக்கியனுயிருந்தாலும் வேறு ஒரு வகுப்பு தாய் தகப்பனுக்குப் பிறந்ததினாலேயே அவன் தாழ்ந்தவனென்றும் தொடக்கூடாதவன், பார்க்கக்கூடாதவன், கிட்டவரக்கூடாதவன், அவனவன் பக்தி செலுத்தும் தெய்வத்தைக்கூட பார்க்கக்கூடாதவன் என்றும், பொது தெருவில் நடக்கக்கூடாதவன் என்றும், தடுக்கிறது. இந்தக்கொடுமையும் முட்டாள் தனமும் நொண்டி ஆணவம் நமது நாட்டில் தான் இருக்கிறதே தவிர வேறு நாட்டில் கண்டிப்பாய் இம்மாதிரி பிறவி தோஷம் கற்பிக்கிறதே கிடையாது. இது மனிதனோடு மாத்திரமில்லாமல் கடவுள்கள் என்று சொல்லப் படுபவைகளுக்கும் இத்தோஷம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டு பழந் தமிழ் சரித்திரங்களில் இம்மாதிரி கொடுமையும் மூடத்தனமும் கொண்ட விஷயங்கள் மருந்துக்குகூட காணப்படுவதில்லை. நமது நாட்டுக்கு, அயல்நாடுகளில் இருந்து வந்து குடியேறின ஒரு கூட்டத்தாரால் கொண்டுவந்து புகுத்தப்பட்ட இந்தமதம் நம்மைஇந்த இழி நிலைக்கு கொண்டு வந்து விட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வு வகுக்கும் தன்மையான வருணம், ஆச்சிரமம், தர்மம், ஜாதி, பிராமணன், க்ஷத்திரியன், சூத்திரன், பஞ்சமர், சண்டாளன் முதலிய வார்த்தைகள் தமிழ் மொழிகளே அல்ல. தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட பாகுபாடு இருந்ததும் இல்லை. தமிழ் நாட்டிற்கு இப்பேர்பட்ட பாகுபாடுகள் எந்த விதத்திலும் வேண்டியதும் இல்லை. அது எந்த விதத்திலும் நடக்கக்கூடிய காரியமும் அல்ல. இந்த இடத்தில் மகாத்மா காந்தியின் அபிப்பிராயம்கூட மறக்க வேண்டியதாகவே இருக்கிறது. பிராமணன் என்பதாக ஒரு ஜாதியோ, ஒரு வகுப்போ, ஒரு மனுதனோ தனியே இருக்கவேண்டும் என்பதின் அவசியம் என்ன. ஜனசேவை செய்வது பிராமணர்களுடைய தர்மம் என்றும், அதற்காகவே அவர்கள் பிறவியிலேயே பிராமணர்களாகப் பிறந்திருக்கிறார்கள் என்றும் மகாத்மா சொல்லுகிறார். ஜனசேவை என்பது ஒரு ஜாதிக்கோ ஒரு மனிதனுக்கோ சொந்தமானதல்ல. உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஒருவனுக்கொருவன் உதவி, உபகாரம், சேவை முதலியவைகள் செய்யவேண்டியது கடமையாகும், ஒவ்வொரு மனிதனும் அவனுடைய வாழ்நாளில் பரோபகாரத்திற்கு ஒதுக்கிவைத்த நேரங்களிலெல்லாம் ஜனசேவை செய்தவனாகிறான், ஒரு மனிதன் ஒரு பொதுக்கிணறு வெட்டினால், வெட்டிவைத்தால், ஒரு பாதை செப்பனிடு செய்தால், செய்வித்தால், சுகாதார விஷயத்தில் வீதி கூட்டினால், கூட்டுவித்தால், இன்னும் இதுபோன்ற காரியங்கள் செய்தால் ஜனசேவை செய்தவனாகிறான். இது ஒரே வர்ணத்திற்கு அல்லது ஜாதி

(இதன் தொடர்ச்சி 10 பக்கம் பார்க்க)



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஸு ஆவணி 12உ

## மகாத்மா காந்தியும் வருணாசிரமமும்

II

“மகாத்மா காந்தியும் வருணாசிரமமும்” என்னும் விஷயமாய் இரண்டு வாரங்களுக்கு முன் “குடி அரசி”ல் மகாத்மாவின் வருணாசிரம அபிப்பிராயத்தை கண்டித்தெழுதியது நேயர்கள் பார்த்திருக்கக்கூடும். அதன்பிறகு பலர் பல பல விதமாக நமக்கு கடித மூலமாய், மகாத்மாவை கண்டிப்பது தர்மமல்லவென்றும், அபிப்பிராய பேதத்தை மகாத்மாவிடம் நேரில் தெரிந்து கொள்ளலாம் என்றும், நேரில் சொன்னால் நமது அபிப்பிராயத்தை மகாத்மா ஒப்புக்கொள்வார்கள் என்றும், எப்படி இருந்தாலும் மகாத்மாவைப்பற்றி ஒரு வார்த்தையாவது விபரீதமாய் எழுதினால் நமது செல்வாக்கே அடியோடு போய்விடும் என்றும், நமது பத்திரிகை ஆகிய “குடி அரசு” கூட ஜனங்களால் மதிக்கப்படாது போய்விடுமென்றும், மகாத்மா பார்ப்பனரல்லாதார் ஆதலால் அவர் பேரில் குற்றம் சொல்லக்கூடாது என்றும், இப்படியாக பல பேர் பல விதத்தில் கடித மூலமாயும் நேரிலும் நமக்கு தெரிவிக்கிறார்கள்.

மற்றும் சிலர், பல பத்திரிகைகளிலும் ஜாடை ஜாடையாய் நமது அபிப்பிராயத்தை கண்டித்தும், மகாத்மாவை ஆதரித்தும் எழுதிவருகிறார்கள் மற்றும் சிலர், எல்லாவற்றையும் குற்றம் சொல்லி விட்டு நீர் என்னதான் செய்யப் போகிறீர், எதைத்தான் ஆதரிக்கிறீர்கள், உமது கொள்கைதான் என்ன என்று எழுதுகிறார்கள். ஆகவே இவைகளுக்கு தனித் தனி பதிலும் சமாதானமும் சொல்லிக் கொண்டிருப்பது மிகவும் கஷ்டமான காரியமானதால் இவற்றிற்கு பொதுவாக இந்த வாரம் சில விஷயங்களை எழுதுகிறோம்.

ஆரம்பத்தில் ஒரு விஷயத்தை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறோம். அதென்னவெனில், நாமும் நமது பத்திரிகையும் வயிற்றுப் பிழைப்புக்கோ, பொது ஜனங்களின் செல்வாக்குப் பெறுவதற்கோ, பொது நன்மையின் பேரால் தொண்டு செய்ய வரவில்லை என்பதே. உண்மையை உண்மை என்றும், சரி என்று பட்டதை வெளிப்படுத்துவதற்கும், பொய் என்றும் தப்பென்றும் பட்டதை கண்டிப்பதற்குமே நடைபெற்று வருகிறது என்பதாகவும், பத்திரிகையின் கொள்கையே அது தான் என்பதாகவும் ஆதி முதற்கொண்டே பல தடவைகளில் வெளிப்படுத்தி இருக்கிறோம்.

இரண்டாவதாக, மகாத்மா காந்தியவர்களிடத்தில் மற்றவர்களுக்கு இருக்கும் அபிமானத்திலும் பக்தியிலும் நமது பக்தி எள்ளளவும் குறைந்ததல்லவென்பதையும் தெரிவிப்பதோடு, மகாத்மாவை தமிழ் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தின அநேகருள் நாமும் ஒருவரென்றும் மகாத்மாவை பின்பற்றி வந்த விஷயத்திலும் இப்போது சிபார்சுக்கு வருகிற எல்லோரையும் விட நாம் பின்பட்டவரல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிற்க:—

மகாத்மாவை குருட்டுத்தனமாய் ஆதரிக்கும் மூலமாய் வரும் செல்வாக்கு நமக்கு அவசியமில்லை என்றும், மகாத்மாவைப்பற்றி நாம் கண்டிக்கும் விஷயம் சரியா தப்பா என்று விசாரணை செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வர யோக்கியதை இல்லாமல், குருட்டு பக்தியாய் அபிப்பிராயம் சொல்லுபவர்களது கண்டனத்தைப்பற்றி நமக்கு கவலை இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிற்க:—

இதுவரையில் கடித மூலமாயும் பத்திரிகை மூலமாயும் நேரிலும் நமது கண்டனத்தை மறுத்தவர்களில் ஒருவராவது பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதி வித்தியாசமும் இல்லை என்று மகாத்மா சொன்னதாகவாவது, பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதிப்பிரிவுகளும் உண்டு என்று அவர் சொல்லவில்லை என்றாவது, ஒருவரும் சொல்லவே இல்லை. இனியும் யாராவது, மகாத்மாவுக்கு பிறவியில் வருணாசிரம தர்மமும் ஜாதியும் இல்லை என்று சொல்வார்களேயானால், அல்லது இல்லையென்று மகாத்மா இன்னவிடத்தில் சொல்லியிருக்கிறார் என்று காட்டுவார்களேயானால், உடனே நான் எழுதியவைகளையும் மறுத்து எழுதி விட்டு, மகாத்மா விஷயமாய் நான் கொண்ட அபிப்பிராயத்தையும் மாற்றிக்கொண்டு, எனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

அப்படிக்கில்லாமல் “அவர் அப்படி எண்ணி இருக்க மாட்டார்” இப்படி எண்ணி இருக்கமாட்டார், “மகாத்மா சொல்வதற்கு அது வல்ல அர்த்தம், இதுவல்ல பொருள்” என்பதான வெறும் உத்தேசமும் வியாக்கியானமும் நமது அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் மாற்றிக் கொள்ளும்படி செய்யவே முடியாது என்பதை வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நிற்க, நமது கருத்தையும், மகாத்மா கருத்துக்கும் நமது கருத்துக்கும் மாறுபட்ட கருத்துக்களைப்பற்றியும், சென்ற மாதம் மகாத்மா அவர்களிடம் நேரில் கலந்து பேசி நம்மைப் பொருத்தவரையிலும் ஒரு முடிவு கட்டிக்கொண்டே வந்து விட்டோம். “மகாத்மாவிடம் நான் கலந்து பேசினேன்” என்று சொல்லிக், கொள்வதும் எழுதிக் கொள்ளுவதும் இக்காலத்தில் பெரிதும் தற்பெருமைக்கே உபயோகித்துக் கொள்ளக் கூடியதாய் விட்டபடியால் அந்த தற்பெருமை நமக்கு வேண்டாம் என்பதாகக் கருதியே நாம் அது சமயம் அதை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

தவிரவும் அது சமயம் நமக்கு மகாத்மாவுக்கும் நடந்த சம்பாஷணைகளின் விபரத்தை மகாத்மாவின் சம்மதம் பெற்றே வெளிப்படுத்த வேண்டியதான ஒரு நிபந்தனைக்கும் நாம் சம்மதம் கொடுத்து வந்ததால் அதையும் வெளியிட முடியாத நிலையில் இருக்கிறோம்.

முக்கியமாய் மூன்று விஷயத்தைப்பற்றியே தான் மகாத்மாவினிடம் நாமும் நமது நண்பரான ஸ்ரீமான் எஸ். ராமநாதனும் சம்பாஷித்தோம். அதாவது என்னுடைய அபிப்பிராயமாக மகாத்மாவுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம்.

இந்தியாவின் விடுதலைக்கும் சுயமரியாதைக்கும் மூன்று முக்கிய காரியங்கள் செய்து முடிக்க வேண்டும் என்றும், அது முடிவு பெறாமல் நமது நாட்டுக்கு விடுதலை இல்லை என்றும், நாம் முடிவு செய்திருக்கிறோம் என்பதாகச் சொன்னோம்.

அதாவது, ஒன்று காங்கிரஸ் என்பதை ஒழிக்க வேண்டியது.

இரண்டாவது, இந்து மதம் என்பதை ஒழிக்க வேண்டியது.

மூன்றாவது, பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டியது என்பவைகளாகும்.

முதல் இரண்டை ஒழித்தாலே பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்து விடுமானாலும், இவ்விரண்டின் மூலமாய் ஒழிந்தது போக பாக்கி கொஞ்ச மிஞ்சம் இருந்தாலும் அதையும் ஒழிப்பது என்கிற கொள்கையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கருத்தையும் காட்டினோம்.

இது விஷயமாய் நடந்த தர்க்கங்கள் முன் சொன்ன காரணத்தால் வெளியிடக்கூடியதல்ல. ஆதலால் இனி இதைப்பற்றி மகாத்மாவிடம் மறுபடியும் கலந்து பேசித்தெரிந்து கொள்ளவேண்டியது ஒன்றும் இல்லை என்பதையும், மகாத்மாவினிடம்நேரிலேயே இம் மூன்று விஷயங்களைப்பற்றியும் மகாத்மா சொன்ன சமாதானங்கள் எம்முடைய அபிப்பிராயத்தை மாற்றக்கூடியதாயில்லை என்றும் சொல்லி மகாத்மாவினிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வந்து விட்டோம். மகாத்மாவும் தான் சொன்ன சமாதானத்தால் நாம் திருப்தி அடையவில்லை என்பதைதெரிந்து கொண்டதாகவும், இன்னம் இரண்டொரு தடவை இதைப்பற்றி பேச வேண்டும் என்றும், சொன்னார். எமது நண்பர் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் கூட மகாத்மா சொன்னது போலவே மறுபடியும் இரண்டொரு தடவை மகாத்மாவிடம் பேசலாம் என்று கூட சொன்னார். இதற்கு உடனே நாம், மகாத்மா நம்முடைய அபிப்பிராயத்தை மாற்றும்படி திருப்தி செய்வார்கள் என்று நம்புகிறீர்களா அல்லது

மகாத்மா அபிப்பிராயத்தை நாம் மாற்றக் கூடும் என்பதாக கருதுகிறீர்களா என்று கேட்டதில், மகாத்மா சொல்வதைக்கொண்டு நம்முடைய அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளக்கூடியதாய் ஏற்படாது என்றும் ஒருக்கால் நமது அபிப்பிராயத்துக்கு மகாத்மா இணங்கக்கூடியதானால் நமது பிரசாரத்திற்கு இன்னம் உதவியாக இருக்காதா என்றும், சொன்னார். உடனே நாம் அந்தப்படி எதிர்பார்ப்பது தப்பு என்றும், மகாத்மாவை திருத்தும்படியாக நாம் சொல்லி சரி செய்ய முடியாது என்றும், நம்ம அபிப்பிராயத்தை நாம் வெளிப்படுத்தவேண்டியது தான் நமது கடமை என்றும் சொல்லிவிட்டோம். இன்ன இன்ன விஷயங்களைப்பற்றி மகாத்மா அவர்களுடன் சாம்பாஷித்ததாக திரு சி. ராஜகோபாலாச்சாரியர் அவர்களிடம் தெரிவித்து விட்டே உத்திரவு பெற்றுக்கொண்டு வந்து விட்டோம்.

எனவே இதுசம்மந்தமாக இனி மகாத்மாவின் அபிப்பிராயம் எப்படி என்பதைப் பற்றி நாம் மறுபடியும் அவரைக் கண்டு கேட்கவேண்டியதில்லை என்பதைப் பற்றியும், அதைப்பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் நமக்கு கொஞ்சமும் சந்தேகமில்லையென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வருணாசிரம விஷயமாய் மகாத்மாவுடன் சம்பாஷித்ததை ஆதாரமாய் வைத்துக்கொள்ளாமலேயே மகாத்மாவே வைக்கு ரில் பேசினதைக் கொண்டும், அதற்கும் அவர் எழுதினதைக்கொண்டும் தான் அந்த மறுப்பு எழுதப்பட்டது. தவிர மகாத்மாவின் வருணாசிரம தர்ம நியமனமும், ஜாதிவித்தியாச நியமனமும் பிறப்பை ஒட்டியதுஎன்பதாக இதற்கு முன் எத்தனையோ தட்வைகளில் மகாத்மாவின் பேச்சினாலும், எழுத்துக்களினாலும் நாம் தெரிந்தே இருக்கிறோம்.

மகாத்மா பார்ப்பன மதமான ஆரியரின் மதத்தைத்தான் இந்து மதம் என்று சொல்லிக்கொண்டு தன்னையும் அதே இந்து இந்து என்று அடிக்கடி சொல்லிவருகிறார். தன்னுடைய பிரசங்கங்களுக்கும் அடிக்கடி ஆரியக்கதைகளான புராணங்களைத்தான் அதாவது ராமாயணம், பாரதம், பாகவதம், முதலியவைகளையே தனக்கு ஒரு டிப்பிளைகளாகவும் மேற்கோள்களாகவும் காட்டிக்கொண்டும் வருகிறார். இந்தமாதிரி புராண வழுக்கலானது எப்படியாவது மகாத்மாவை சேற்றில் கொண்டுபோய் அழுத்தியேதீரும் என்பதே நமது துணிபு.

தமிழ் நாட்டின் நாகரிகமும் தமிழ் நாட்டின் பழய பழக்க வழக்கங்களும் மகாத்மாவுக்கு தெரிவதற்கு சந்தர்ப்பமேயில்லை. மகாத்மா தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தில் வள்ளியம்மை நாகப்பன் என்பது போன்ற சில தமிழ் மக்கள் மூலம் தமிழரின் வீரத்தை அறிந்திருக்கலாமே தவிர தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் பார்ப்பனர்களின் மூலமாகத்தவிர வேறொன்றும் அவர் அறிந்திருக்க முடியாது என்பதாக உறுதி கூறலாம்.

ஆரியக்கொள்கையான பார்ப்பன மதத்திற்கும் தமிழர் நாகரிக பழக்க வழக்கத்திற்கும் ஏறக்குறைய 2000, 3000 வருஷங்களாகவே யுத்தங்கள் நடந்து வரும் விஷயங்களை மகாத்மாவுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள்யார்? மகாத்மா மடத்தில் இருக்கிறார்கள். ஆதலால் தமிழ் நாட்டிற்கு ஆரியக் கொள்கைகள் கூடாது என்பதாக நாம் பிரசாரம் செய்வதானால் அதைப் பொருத்தவரை மகாத்மா கொள்கை கூடாது என்று தான் நாம் சொல்லி ஆகவேண்டும். தொழிலின் மூலமாகக்கூட மக்களைப் பிரிக்கக் கூடாது. பிரிக்கமுடியாது......பிரிப்பதும் உலகஇயற்கைக்கும் மனிதத்தன்மைக்கும் சரியல்லவென்று வாதாடுகிற நாம் 'பிறவியில ஜாதி உண்டு, தொழில் உண்டு இது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டது, கடவுளால் ஏற்படுத்தப்பட்டது; ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டது" என்றால் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும். ரிஷிகள், கிருஷ்ணன் முதலானவர்கள் காலமல்ல இது என்பதும், நாம் அந்தக்காலத்தில் இல்லை என்பதும், இந்தக்காலத்தில் அவர்கள் இல்லை என்பதும், அது சரியா தப்பா, நிஜமா பொய்யா என்பதற்கு சரியான ஆதாரமும் அவசியமும் சாத்தியமும் இல்லை என்பதும் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மனிதனுக்கும் தானாக விளங்கும்போது 'பாட்டி கதைக்கு' எப்படி மரியாதை கிடைக்கும் என்பது நமக்கே விளங்கவில்லை.

மகாத்மாவும் வருணாசிரமமும் என்னும் வியாசத்தை மகாத்மாவுக்கும் அனுப்பித்தான் இருக்கிறோம். மற்றொன்றை அவரது அந்தரங்க சிஷ்யர்களுக்கும் அனுப்பி மகாத்மா தகவலுக்கு கொண்டு போகும் படி கேட்டுக் கொண்டும் இருக்கிறோமேயல்லாமல் மகாத்மாவுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆனால் அவரது பரமானந்த சிஷ்யர்கள், இம்மாதிரி விஷயங்களை லக்ஷியம் செய்யாதீர்கள். லக்ஷியம் செய்தால் மறுப்புக்கு அதிக யோக்கியதையுண்டாகிவிடும், மறுப்பவனுக்கும் அந்தப் பத்திரிகைக்கும் யோக்கியதை அதிகமாகிவிடும், ஆதலால் குப்பையில் போட்டுவிடுங்கள் என்றுதான் சொல்லிக் கொடுப்பார்கள் அதை மீறுவதற்கு மகாத்மாவுக்கு இது சமயம் சக்தியில்லையென்பதே நமது அபிப்பிராயம். ஆகவே இந்த விஷயம் முக்கியமானதாலும் நமது நாட்டின் விடுதலைக்கும், நமது சுயமரியாதைக்கும், வருணாசிரமம் என்கிற தத்துவமே அதிஅம்பிறவிப்பல்லை வருணாசிரமமுமஜாதியும்உண்டு என்கிற தத்துவமே எமனாய் இருக்கிறது என்பதான கண்ணியமான முடிவுக்கு வந்திருப்பதாலும், அதை யொழிக்கப் பாடுபடுவதே நாட்டின் விடுதலையும் சுயமரியாதையும் கோரும் மனிதனின் கடமையென்று நாம் களங்கமற உணருவதாலும் கண்டிக்கவேண்டியதாயிருக்கிறதே என்பதாக வருத்தத்துடன்தான் இதை எழுதுகிறோம்.


## " திராவிடன் "

வேண்டுமா? வேண்டாமா?

சகோதரர்களே!

பார்ப்பன ஆட்சியாலும், பார்ப்பன சூழ்ச்சியாலும், பார்ப்பன மதத்தாலும், பார்ப்பனப்பத்திரிகைகளின் பிரசாரத்தாலும், நீங்கள் இழந்து கிடக்கும்சுயமரியாதையையும், சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் திரும்பவும் அடைய

வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமானால் அதற்கென்றே உங்கள் தொண்டர்களால், பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகி நடத்தப்பட்டு வரும் 'திராவிடனை" வாங்கிப் படியுங்கள். "திராவிடன்" தான் போலி தேசியத்தையும் சுயராஜ்யப் புரட்டையும் தைரியமாய் வெளியாக்கி சுயமரியாதைக்கென்றே உழைப்பவன். எனவே. "திராவிட"னன்றிக் கண்டிப்பாய் உங்களுக்கு கதிமோட்சமில்லை; இதை நம்புங்கள்.


கிழிந்த பஞ்சாங்கம், தர்ப்பைப்புல் இவை உன்னை என்ன செய்யும்?

7-ம் பக்கத் தொடர்ச்சி

க்கு வகுப்புக்கு என்பதாக ஏன் பிரித்து வைக்க வேண்டும். எப்படி பிரித்து வைக்க முடியும். மற்றவர்களுக்கு ஏன் அந்த பாத்தியம் அவரவர் சவுகரியப்படி செய்ய விடக்கூடாது. தவிர, நாட்டை யாள்வது க்ஷத்திரியனுக்கு உரிய தர்மம் என்று சொல்லுவோமானால் ஒரு நாட்டை ஒரு மனிதன் தான் ஆளமுடியும். ஒரு வருணமோ ஒரு ஜாதியோ ஒரு வகுப்போ ஆளமுடியாது. அப்படிப்பார்த்தால் ஒரு நாட்டிற்கு ஒரே ஒரு க்ஷத்திரியன் தான் இருக்க முடியும். நாட்டை ஆளுகிறவனுடைய ஜாதியெல்லாம் க்ஷத்திரிய ஜாதி ஆகிவிட்டால் உலகத்தில் ஆளப்படாத ஜாதியே கிடையாது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு ஜாதியோ வகுப்போ உலகம் பூராவையோ அல்லது ஓர் பாகத்தையோ ஏதாவது ஒரு காலத்தில் ஆண்டுதான் இருக்கின்றது. ஆகவே எல்லோரையுமே க்ஷத்திரியர் வர்ணத்தில் தான் சேர்க்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் மகாத்மா மைசூரில் சொன்னது போல் "எளியவர்களைப்பாதுகாப்பது க்ஷத்திரியனுடைய தர்மம்" என்பதாகப் பார்த்தாலும் எளியவர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு தனி வருணமோ ஜாதியோ எதற்காக வேண்டும், எப்படி இருக்க முடியும். பிறவி க்ஷத்திரிய வர்ணத்தில் எளியவர்கள் இருக்கமாட்டார்கள், அன்றியும் மற்றவர்கள் எளியவர்களைக் காக்கக்கூடாதா. மனிதனுடைய அவனவன் வாழ்வில் எளியவர்களைக் காப்பதற்கு ஏதாவது ஒரு நேரமோ செய்கையோ ஒதுக்கிவைத்துக்கொண்டு செய்தால் அது எளியவர்களைக் காத்ததாகாதா. இப்படியே பிறவி வைசிய வருணத்திற்கு என்ன தர்மம் கட்டுப்பட்டது என்றால், வைசியர்கள் வியாபாரம் செய்தல் வைசியர்கள் தர்மம் என்று ஒரு பக்கமும், மாடுமேய்த்தல் வைசியர் தர்மம் என்று மற்றொரு பக்கத்திலும், உழவு செய்தல் வைசிய தர்மம் என்று மற்றொரு பக்கத்திலுமாக ஆரிய நூல்களில் உளறிக்கொட்டி இருக்கிறது. இதில் எதை மகாத்மா ஒப்புக்கொள்ளுகிறாரோ அதைப்பற்றி நமக்கு கவலையில்லாவிட்டாலும் இந்த தொழிலுக்கு ஒரு தனி பிறப்பு வருணம் எதற்காக ஒதுக்கி வைக்கவேண்டும். இவைகளை எப்படி ஒதுக்கிவைக்க முடியும். மற்றவர் ஏன் செய்யக்கூடாது. அதுபோலவே சூத்திரர் என்பவர்களுக்கும் என்ன என்னமோ தர்மம் சொல்லுவதானாலும் குறிப்பாய் அடிமைத்தனத்தையும், பிராமண வர்ணத்தானுக்கு வைப்பாட்டி மகன் என்கிற தத்துவத்தையும் தான் சொல்லுகிறது. இதில் எதை மகாத்மா ஒப்புக்கொள்வதானாலும், இந்தக் காரியத்திற்கும் ஒரு தனிவருணம் எதற்கு என்றும், இந்த காரியங்கள் மற்றவர்கள் ஏன் செய்யக்கூடாது என்றும், மற்றவர் செய்யாமல் இருக்க முடியுமா என்றும் தான் கேட்கிறோம். இப்படிப்பட்ட ஆபாசங்களை நம்ம தலையில் சுமத்தி யோக்கியன் அயோக்கியன் அடையாளம் தெரிவதற்கில்லாமல் மக்களைப் பிரித்துப் பாழ்படுத்தி இருக்கிற மதக்கொடுமையாலே தான் நமது நாட்டிற்கு சுபாவமாகவே விடுதலை கெட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல என்றபொருள்படும்படிக்கும் மற்றும் இது போலவே கடவுள், பக்தி, கோயில், சடங்கு முதலிய விஷயங்களில் நம்முடைய மூட கொள்கைகளையும், பார்ப்பனர்கள் கொடுமையையும் விரிவாக எடுத்துச் சொல்லி இவைகள் ஒழிவதுதான் சுயராஜ்யம் அளிக்கவல்லது என்றும், இதுவே அரசியல் என்பது என்றும், இதைத்தவிர வேறு விஷயங்களை அரசியல் என்றும் சுயராஜ்யம் என்றும் உரிமை என்றும் தேசியமென்றும் பேசுவதெல்லாம் வீண் புரட்டு என்றும், குறிப்புக் காட்டினார். வழக்கப்படி வந்தனோபசாரத்துடன் கூட் 9½ மணிக்கு கலைந்தது. மறுநாள் காலையில் நாயக்கர் குற்றாலம் புறப்பட்டுவிட்டார்.

## இது சத்தியாக்கிரகமாகுமா?

சென்ற வாரம் சென்னை மவுண்ட்ரோட்டில் உள்ள நீல் துரை உருவச்சிலையை இரண்டு தொண்டர்கள் உடைத்ததற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று மூன்று மாதம் கடுங்காவலும், மூன்னூறு ரூபாய் அபராதமும், அது செலுத்தப்படாவிட்டால் மேல் கொண்டு 3 மீ தண்டனையும் அனுபவிக்கத்தக்கது என்பதாக தண்டிக்கப்பெற்றிருக்கிறார்கள். ஒரு சிலையின் கையை ஒடிப்பது சத்தியாக்கிரகமாகுமா? தொண்டர்களின் மன உறுதியையும் அவர்களது தேசாபிமான வெறியையும் மெச்சிக்கொள்வதானாலும் இச்செய்கைக்கு சத்தியாக்கிரகம் என்ற பெயர் ஒரு சிறிதும் பொருந்தாது என்பதே நமது அபிப்பிராயம்.

அக்கிரமத்தை ஒழிக்க எவ்வித கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயாராயிருக்கும் இம்மாதிரி ஊக்கமுள்ள தொண்டர்களை தலைவர்கள் என்பவர்கள் சரியான வழியில் நடத்தி பயன் உண்டாகும்படியாக உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமே யல்லாது இம்மாதிரி ஒழுங்கில்லாத காரியங்களைச் செய்வதற்கு உதவியாயிருக்கக் கூடாதென்பதே நமது அபிப்பிராயம்.

ஒரு சிலையின் கையை உடைப்பது துராக்கிரகமென்பதே நமது அபிப்பிராயம். சிலையை எடுக்கும்படி போராடலாம். அதற்காக சத்தியாக்கிரகம் செய்யலாம். அதைப் பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை ஒரு சிலையை விகாரமாக்குவது மகாத்மாவின் தத்துவப்படி பார்த்தால் எல்லைகடந்த பலாத்காரமாகும் என்றே நமக்குப் புலப்படுகிறது. நல்ல விஷயங்களுக்கு ஏற்பட்ட பொருளை இம்மாதிரி விஷயங்களுக்கு செலவு செய்வதை நாம் பாராட்ட முடியாததற்கு வருந்துகிறோம். நீல்துரை அக்கிரமக்காரர் என்பதாகவே வைத்துக்கொள்வோம். அவர் செய்த அக்கிரமத்தை விட அதிகமான அக்கிரமங்களும் கொடுமைகளும் செய்துவருகிறவர்களையெல்லாம் நாம் என்னசெய்து விட்டோம்? அப்பேர்ப்பட்டவர்களையெல்லாம் பலாத்காரமில்லாமல் மனமாற்றமடையும்படி நாம் அவர்களை வேண்டிக்கொள்ளுகிறோமே யல்லாமல் அவர்களுடைய கையையும் காலையும் ஒடிக்கப்போகிறோமா? அல்லது ஒடிக்க எண்ணுகிறோமா? அந்தப்படியே இதிலும் நாம நடந்துகொள்ளவேண்டியதிருக்க இம்மாதிரி நடக்கத்துணிந்ததானது வருத்தப் படத்தக்கதேயாகும். இம்மாதிரியே ஒவ்வொரு காரியத்திற்கும் செய்ய ஆரம்பிப்போமானால் கடைசியாக அது எங்குபோய் நிற்குமென்கிற ஒரு முடிவு கட்டவும் முடியாது. அன்றியும் நாம் நினைக்கிற காரியமும் கைகூடாததுடன் அது முறை அல்லவென்றே சொல்லுவோம்.

## ஒரு குறிப்பு

ஸ்ரீமான் E. V. ராமசாமி நாயக்கர் அவர்கள் தேகாரோக்கியத்தை முன்னிட்டு தற்சமயம் குற்றாலத்தில வசிக்கிறார்.

## டெல்லி கிருஷ்ணனும் தமிழ்நாட்டு கிருஷ்ணனும்.

(சித்திரபுத்திரன் எழுதுவது)

டெல்லியில் உள்ள பாலகிருஷ்ண சுவாமி கோவிலில் கிருஷ்ண ஜயந்தி என்கிற பண்டிகையின்போது தீண்டாதவர்கள் என்கிறவர்களை எல்லாம் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தமிழ் நாடு பத்திரிகையில் காணப்படுகிறது. புராணங்களின்படி கிருஷ்ணன் என்பதாக ஒரு சுவாமியோ ஆசாமியோ இருந்ததாக நாம் ஒப்புக்கொள்வதானால் அது ஒரே சாமியாகத்தான் இருந்திருக்கலாமே தவிர, டெல்லிக்கு ஒரு கிருஷ்ணனும் தமிழ் நாட்டுக்கு ஒரு கிருஷ்ணனும் இருந்திருக்க முடியாது. அப்படியிருக்க டெல்லி கிருஷ்ணன் "தீண்டாதவர்கள்" கோவிலுக்குள் போனால் ஓடிப்போகாமல் கோவிலுக்குள்ளாகவே தைரியமாய் உயிருடன் இருக்கும்போது, நமது தமிழ் நாட்டு கோவில்களில் உள்ள கிருஷ்ணன் மாத்திரம் தீண்டாதவர்கள் உள்ளே போனால் கோவிலைவிட்டு ஓடிப்போவதோ, அல்லது ஒரே அடியாய் செத்துப்போவதோ ஆனால் இந்தமாதிரி கிருஷ்ணனை வைத்து பூஜை செய்வதால் நமக்கு என்ன பலன் அவரால் உண்டாகக்கூடும். ஒரு மனிதன் உள்ளே வந்தால் தாக்குப்பிடிக்காத கிருஷ்ணன் யாருக்கு என்ன செய்ய முடியும். ஆதலால் நாம் தமிழ் நாட்டு கிருஷ்ணனை துரத்திவிட்டு இனிமேல டெல்லி கிருஷ்ணனைத் தான் தருவித்துக் கொள்ளவேண்டுமேயல்லாமல் இந்த மாதிரி சக்தியில்லாத, கிட்டப் போனால் ஓடிப்போகிற கிருஷ்ணன் இனி நமக்கு அரை நிமிஷங்கூட கண்டிப்பாய் உதவவே உதவாது.

## ஊத்தங்கரை தாலூக்கா மஹாநாடு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதாவது:—கிராம பஞ்சாயத்து, கிராமாதிகாரிகள் சங்கம், பாஸ்டு, கல்வி, தபால், ரோட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு, ரூரல் கிரிடிட் சொசைட்டி முதலியவைகளில் நம்ம தாலூக்காவில் இருக்கும் குறைகளை கவனிக்கவும் காங்கிரஸ் விஷயமாய் யோசிக்கவும் ஒரு தாலூகா கான்பரன்சு நடத்த உத்தேசிக்கப்பட்டு அது விஷயமாக ஒரு விஷயாலோசனை சபை 31-8-27-ல் மாலை 4-மணிக்கு அரூர் பெருமாள் சன்னதியில கூடுவதால் யாவரும் வர கோரப்படுகிறது.

H. V. வேடி செட்டி,
பிரசிடெண்டு தா. மஹாஜன சபை

காட்டாளி கவுண்டர்,
K. பச்சயப்ப முதலியார்,
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர் &
பிர்க்கா பஞ்சாயத்து சேர்மேன்.

ம. ச. ராமகிருஷ்ண செட்டி,
கொ. பெ. கோபால செட்டி,
காங்கிரஸ் காரியதரிசிகள்.

## திருப்பூர் வஸ்திராலயத்தின் பரிதாபநிலை.

(திருப்பூர் திரு. சொக்கப்பன் எழுதுகிறார்)

பீடிகை:— நான் ஒரு திருப்பூர் வாசி—, கதர்ப்பிரியன், திருப்பூர் கதர் வஸ்திராலயத்தைப் பற்றி எனக்கு ஒருவித அபிமானமுண்டு. ஆகையால் அடிக்கடி அதன் அபிவிர்த்தியைப் பற்றியும் க்ஷேமத்தைப் பற்றியும் விசாரித்துக்கொள்வதுண்டு. சில வருஷங்களுக்குமுன் ஸ்ரீமான் சந்தானமையங்கார் இதற்கு காரியதரிசியாயிருந்தார். அவர் "கணக்கு, கணக்கு, ஒழுங்கான கணக்கு" என்று கதறினார். அதன் பிறகு ஸ்ரீமான் தங்கப்பெருமாள் பிள்ளை அவர்கள் காரியதரிசியானார். அவர் "தபால் தபால்" "எழுதிய கடிதங்களுக்கு பதில் எழுதுவதே முறை" என்று முறையிட்டார். தற்போதுள்ள ஸ்ரீமான் ராமநாதம் பிள்ளையவர்களோ "ஸ்டாக் ஸ்டாக்" என்று சரக்கு இருப்பு விஷயத்திலேயே தன் முழுக்கவனத்தையும் செலுத்திவிட்டு மற்ற விஷயங்களில் தலையிட்டுக்கொள்வதில்லை. அவரவர் குணம், பயிற்சி, முதலியவையின்படி எண்ணம் போலும் என்று இதை மறந்துவிடுங்கள். ஆனால் மூலப்பொருளாகிய திருப்பூர் வஸ்திராலயம் மட்டும் ஓர் மறக்கக்கூடாத விஷயம். ஏனெனில் அது கதர் தொண்டுக்கே ஓர் திலகம் போன்றது.

பார்ப்பன ஆட்சி: இத்தகைய ஒப்பற்ற கண்ணியம் வாய்ந்த ஓர் ஸ்தாபனம் இப்போது ஓர் பார்ப்பனர் கையில் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு கொஞ்சமல்ல, "சண்டை, சண்டை மனஸ்தாபம்" ஆகிய சப்தமே அதைச்சுற்றிலும் தொனிக்கிறது. அதில் வேலை பார்த்து வரும் பார்ப்பனரல்லாத குமஸ்தாக்களிடமெல்லாம் அதன் மானேஜருக்கு மனஸ்தாபம், வெறுப்பு. அது மாத்திரமோ? சமயம் கிடைத்தபோதெல்லாம் பார்ப்பனரல்லாதவர்கள் ஒவ்வொருவராக வெளியேற்றப்படுகின்றனர். வெளியேற்றினது போக பாக்கியுள்ள எல்லோருக்கும் வலை வீசப்பட்டிருக்கிறது. ஆகவே இத்துடன் அங்கிருக்கும் பார்ப்பனரல்லாத குமாஸ்தாக்கள் அனைவருக்கும் உலை வைத்தாகிவிட்டது. ஸ்ரீமான் திரு நாராயண அய்யங்காரும்—அதுவே வஸ்திராலயம் மானேஜரின் பெயர்—ஆனந்தக்கண்ணீர் விடுகிறார்.

பெரிய இடத்துச் சண்டைகள்:—வியாபாரத்துக்கோ அல்லது சொந்த உபயோகத்துக்கோ துணிவேண்டுமென்று வந்தவர்களை மட்டில் அவர் சும்மா விட்டபாடில்லை. வந்தவர்கள் பெரிய மனிதர்களாய்த் தென்பட்டால் அவர் கேட்கும் ஜவுளி ஸ்டாக்கில் இல்லை என்ற பதில் கிடைக்கும். அல்லது கண்ணெதிரே இருக்கும் சரக்கைக் கேட்டுவிட்டாலோ, அது அவர்கள் கிளை வஸ்திராலயத்திற்கு வேண்டியதாகப் போய்விடும். வந்தவர் சிறிய மனிதராய்த் தோன்றினால் "இங்கே சில்லரை வியாபாரம் கிடையாது" என்ற பதில் கிடைக்கும்.

சில நாள்களுக்கு முன் திருப்பூர் வியாபாரிகளுள் ஒருவர் துணி எடுப்பதற்காக வஸ்திராலயம் போனார். அப்போது ஸ்ரீ அய்யங்கார் சாய்ந்து படுத்துக்கொண்டிருந்தார். போனவர் ஏதோ துணி வேண்டுமென்று கேட்க ஸ்ரீ அய்யங்கார் இல்லை என்றார். வியாபாரிக்கு அவர் சொன்னது கிணற்றுப்பேச்சுப்போல் விளங்கியதால் அவர் உள்ளே போய் கேட்க எண்ணங்கொண்டு ஒரு அடி எடுத்து வைத்தார். உடனே அய்யங்காருக்கு "ஆஹா நம் பேச்சில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டதா" என்று கோபம் எழவே அவர் தலைகால் தெரியாமல் ஏதோ உளரிக்கொட்டினார். வியாபாரி அதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பாரா? அவரும் ஏதோ சொன்னார் ஆகவே இருவருக்கும் சண்டை மூண்டது. ஐரோப்பா யுத்தம் கூட இதற்கு ஈடாகாது. ஏனெனில் அந்த யுத்தத்தில் 'டப்' 'டுப்' என்ற அர்த்தமில்லாத சப்த மட்டும் கேட்கும். ஆனால் இங்கேயோ வெனில் 'ட'காரப்பிரயோக முதல் சகல மூன்றெழுத்து வார்த்தைப் பிரயோகங்களுடனும் யுத்தம் நடந்தது. வீதியில் போகும் ஜனங்களெல்லோரும் நின்று வேடிக்கை பார்த்துக் களித்தார்கள். என்ன அலங்கோலம்! என்ன அவமானம்!! தூய்மை பொருந்திய மகாத்மா அவர்களுடைய திட்டத்தை வளர்க்க வேண்டிய ஓர் ஸ்தாபன தலைமை அதிகாரி இம்மாதிரி ஓர் காவாலியைப்போல் சண்டை திரட்டிக்கொண்டு சந்தி சிரிக்கச்செய்வதா என்று எண்ணினேன். அடுத்த நிமிஷமே இவர்கள் எல்லோரும் படித்தவர்கள், ஷெ அய்யங்கார் ஒரு பி.ஏ, அவருக்குமேல் அதிகாரி ஒரு எம். ஏ. பி. எல். ஈரோடு தலைமை அதிகாரி ஓர் பி. ஏ. ஆக இவ்வளவு பட்டம் பெற்ற பெரிய இடத்துச்சங்கதிகள் நமக்கு எதற்கு என்று மறக்க எண்ணினேன். ஆனால் முடியவில்லை.

நவாப் தர்பார்:— முக்காலத்தில் அரசாண்ட நவாப்கள் ஒரு காரியம் செய்ய நினைத்தால அதை உடனே மந்திரிகளுக்குச்சொல்லி அதை ஒரு சட்டமாகச் செய்துவிடுவது வழக்கமாம். இதற்கு சரித்திர ஆதாரம் என்னிடமில்லை. ஆனால் இப்போது கூட யோசியாமல் எந்தக்காரியத்தைச் செய்தாலும் அதை நவாப் தர்பார் என்று சொல்லுவதுண்டு. வஸ்திராலயத்தில் ஒரு ஏஜண்டு ஆபீஸ் நேரமாகிய 6 மணிக்குப்பின் பணம பெற்றுக்கொள்ள வந்தார். பணம் கொடுப்பவர் காணப்படவில்லை

அவ்வண்ணம் அந்த ஏஜண்ட் பணம் பெறத் தவறிவிட்டது ஸ்ரீமான் அய்யங்காருக்குப் பிடிக்கவில்லையாம் உடனே அவர் காகிதத்தை எடுத்தார், பேனாவை கையில் பிடித்தார், இனிமேல் ஆபீஸ் 7 மணிக்குதான் கலையுமென்று எழுதிமுடித்தார். ஷெ ஏஜண்ட் அன்று பணம் வாங்க முடியாமல் போனதின் காரணமென்ன? இம்மாதிரி வேறு யாராவது தவறினவர்கள் உண்டா? அல்லது ஆபீஸ் நேரத்திற்குள் வாங்கத் தவறினாரா? என்ற விஷயங்களை கேட்டறிந்தல்லவா எந்தக் காரியமும் செய்யவேண்டும், அப்படியில்லாமல் பேனா உண்டு, மசி உண்டு, நாம் எழுதினதற்கு "அப்பீல்" ஏது? என்ற எண்ணத்துடன் "ஆர்டர்கள்" போடுவதென்றால் அத்தகையாரின் தன்மை என்ன? ஒரு ஏஜண்ட் தன் கவலையின்மையால் அன்று பணம் வாங்கத்தவறினால் அவருக்கு நன்மைகள் செய்வதுபோல் பாசாங்குகாட்டி குமஸ்தாக்களை 7 மணிவரை ஈயோட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கச் செய்வதென்றால் அதை பொது ஸ்தாபனமென்று ஏன் பறை சாற்றிக் கொள்ளவேண்டும்? அதை ஸ்ரீமான் அய்யங்கார் பெயராலே நாமகரணம் சூட்டிவிடலாமே? இது நவாப் தர்பார் ஷெ வஸ்திராலயத்தில் பணம் கொடுக்கும் குமஸ்தா ஒரு பார்ப்பனரல்லாதார் என்று மட்டும் தெரிந்துகொண்டு வாயை மூடிக்கொள்.

தரிசனம்: சாக்ஷாத் அய்யங்கார் அவர்களை திருப்பூர் வசிகளில் அநேகம் பேர் பார்த்திருக்கமாட்டார்கள். ஒருநாள் நொய்யலாற்றின் கரையில் அவரைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மேற்படி ஆற்றில் காவல்காக்கும் சாயபுவினிடம் அவர் என்னமோ கோபமாகப் பேசிக்கொண்டிருந்தார். சிறிதுநேரம் அங்கேயே நின்று கேட்டேன் ஷெ அய்யங்கார் நடத்தையை இவ்விடத்திலும் பார்த்து எனக்கு அந்த வேலையில்லையென்று கம்பி நீட்டிவிட்டேன்.

வசிய மருந்து—ஸ்தானத்துக்கு அரண்: யாராவது ஒருவர் மன்னிக்கப்படாத ஓர் குற்றம் செய்துவிட்டால் அவர்கள் விஷயத்தில் ஸ்ரீமானுக்கு அளவுகடந்த அநுதாபம், அநுசரணை. இந்தச்சமயத்தில் அநுதாபம் எதற்கு என்று ஆச்சரியப் படுகிறீர்களா. இதுவே அவரிடமிருக்கும் வசிய மருந்து. அவர்ஸ்தானத்தைச் சுற்றிலும் ஏற்படுத்திக் கொள்ளும் அரண் இதுவே. இருப்பினும் கெட்டிக்காரன் புரட்டு எட்டு நாளைக்கு. பின்னர் அவைகள் சந்திருக்கு வந்துதானே ஆகவேண்டும்

முடிவுரை: இந்த ஸ்தாபனம் கேவலம் பணம் சம்பாதிக்கும எண்ணத்துடனேயோ அல்லது அதைக் கைப்பற்றியிருக்கும் ஓர் சிலரின் பிரயோஜனத்திற்கோ அல்லது ஸ்ரீமான் அய்யங்காரின் செல்வத்திருவிளையாட்டிற்கோ ஏற்பட்டது? பணங்கொடுத்த ஏழைகள் இதன் தற்போதைய நிலைமையைக்கண்டு கண்ணீர் விடாமலிரார் என்பது திண்ணம.

வாசகர்களே! பொது ஜனங்களே வஸ்திராலயம் அழும் குரல் இப்போதாவது உங்களுக்கு கேட்கிறதா? கேட்டும செவிடாகிவிடாதீர்கள். அதனை அதன் ஆபத்திலிருந்து விடுவிக்க முற்படுங்கள். இல்லையேல் அது மடியும். உஷார்! உஷார்!! உஷார்!!!

---

புரோகிதம் ஒழிந்த திதி:—சென்ற வருஷம ஆடி மாதம 31 தேதி 15-8-27 ல் என் தகப்பனார் ஜெனார்த்தன நாயுடு அவர்களுக்கு வருஷாந்தர திதியை புரோகிதப் பார்ப்பனர்களை விலக்கி நானாகவே ஸ்நானம் செய்து, மந்திரங்களைச்சொல்லி, வீட்டில் இலை போட்டு படைத்து, ஏழை பந்து மித்திருருடன் வெகு விமரிசையாய் நடத்தினேன். கயவஞ்சக பிராமணர்கள் சூதுக்கு இடம் தராமல் அவரவர்கள் தமது குலப்பெரியோர்களைக்கொண்டு சுப அசுப காரியங்களை நடத்திகொள்வார்களாக என்று இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று பொன்மலை சுழந்த சித்திரத்தக்காரான திரு. டீ. ஜெ. சென்னிராஜலு நாயுடு எழுதுகிறார்.

## "கிருஷ்ணகிரி பார்ப்பன உபாத்தியாயர்களின் அக்கிரமம்"

கிருஷ்ணகிரி போர்டு உயர்தர பாடசாலையில் பத்து பார்ப்பனர்களும் மூன்று பார்ப்பனரல்லாதாரும் உபாத்தியாயர்களாக வேலைபார்த்து வந்தார்கள். அதில் சுப்பிரமணிய செட்டியார் என்பவரை காவேரி பட்டணத்திற்கு மாற்றிவிட்டார்கள். மற்ற பார்ப்பன பார்ப்பனரல்லாத இருவரும் பள்ளிக்கூடத்தில் இருப்பது சரியல்ல என்று நினைத்த பார்ப்பன உபாத்தியாயர்கள் சிலகாலம் அந்தரங்கமாகவே ஆலோசனை செய்தார்கள் போலும். ஆகவே அண்டப்புளுகெல்லாம் எழுதி அவர்கள்மேல் குற்றம்சாட்டி மேலதிகாரிகளுக்கு எழுதினார்கள். முடிவாக பள்ளியிலிருந்த முதலியாரும் கவுண்டரும் ஆகிய உபாத்தியாயர் இருவரும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்! அவ்விருவர்களுக்குப் பதிலாக வேறு இரண்டு பார்ப்பன உபாத்தியாயர்கள் வந்து சேர்ந்தார்கள். இப்பொழுது ஷை பள்ளிக்கூடம்பார்ப்பனமயமாய்விட்டது இச்சமயத்தில் திரு முத்துசாமி கவுண்டர் ஜில்லா போர்டுத் தலைவரை நேரில்போய்கண்டு உண்மையைச் சொல்லிக் கொள்ளவே, அவர் மறுபடியும் உத்தியோகம் கொடுப்பதாக வாக்களித்து பின்னால் உத்திரவும் அனுப்பினர். அந்த உத்தரவை தலைமை உபாத்தியாயர் பெற்றுக் கொண்டு அதை ஒருவருக்கும் சொல்லாமலே அவ்வுத்தரவை தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டார். ஷை கவுண்டா மறுபடியும் விஷயம் தெரியாமல் ஜில்லா போர்டு ஆபீசுக்குபோய் விசாரிக்கவே, உத்தரவு முன்னமே அனுப்பி யிருந்ததாகத் தெரிந்து திரும்பிவந்து வேலையேற்று சிலகாலம் கழித்தபிறகு மறுபடியும் பார்ப்பனர்கள் ஏதோ ஒரு சூழ்ச்சிசெய்து ஷை கவுண்டரை மறுபடியும் பள்ளிக்கூடத்தினின்று நீக்கிவிட்டார்கள்.

ஷை பாடசாலையில் இவ்வாறான சதியோசனைகளால் நாளுக்கு நாள் மாணவர்களுடைய அம்சம் குறைந்துகொண்டே போகிறது. இவ்விஷயத்தில் பார்ப்பனரல்லாதார் சுகமடையும் பொருட்டும் மாணவர்களுடைய கல்வி அம்சத்திற்கு சுந்தகமில்லாமலிருக்கும்பொருட்டும், விஷயங்களைவிசாரித்து ஜில்லாபோர்டு தலைவர் கூடியசீக்கிரம் தக்கது செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம் என்று கிருஷ்ணகிரியிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்.

'ஏல விவசாயி'.

'ஏல விவசாயி' என்னும்பெயர்பெற்ற ஒரு தமிழ் மாதாந்த சஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. இது எழுபது எண்பதாயிரம் ஏக்கர் ஏலவிவசாய பூமிகளில் சுமார் 40 லட்சம் 50 லட்சம ரூபாய் பெறுமான மகசூல்களை உண்டாக்கும் 2 ஆயிரத்துக்கதிகமான ஏல விவசாயிகளை அங்கத்தினராகக் கொண்ட திருவாங்கூர் ஏலவிவசாய சங்கத்தினின்றும் வெளியிடப்பட்டு வருவது. பல துறைகளிலும்ஆராய்ச்சியுள்ள திருஆர். நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டது. விவசாயமே எல்லாத் தொழில்களிலும் சிறந்ததாயிருந்தும், நம் நாடு விவசாயத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தும், விவசாயவளர்ச்சிக்குரிய புது விதமான கருவிகளைக்குறித்தும், புது முறைகளைப்பற்றியும் ஐக்கிய இயக்கம், கூட்டுறவு இயக்கம், விவசாயச் சங்கம, ஆகியவைகளைப்பற்றியும், விவசாயப் பொருள்களைச் சேகரம் செய்து செலவழிக்கும் முறைகளைக்குறித்தும், நமது நாட்டில் தாய்ப் பாஷையில் உள்ளவும் பத்திரிகைகள் மிகச்சிலவே. ஆகவே இவ்விஷயங்களைக்குறித்தும், மிளகு, இஞ்சி, வெங்காய, எலுமிச்சை, ஆரஞ்சு, காப்பி, சணல் ஆகியவைகளைக்குறித்தும் விசேஷமாக ஏல விவசாயத்தைக்குறித்தும், முதலாளி, தொழிலாளிகளைக்குறித்தும், தமிழ் மொழி, தமிழ் நாடு, திருவாங்கூர் சரித்திரம், ஆரோக்கியம் ஆகியவைகளைப்பற்றியும் இந்த 'ஏல விவசாயி' என்னும் பத்திரிகை எழுதிவரும். ஆகலால் இப்பத்திரிகையை விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள், முதலாளிகள், தமிழ் நாட்டார், தாய் நாட்டார் ஆகிய அனைவரும் ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளார்கள். இதன் வருஷ சந்தா ரூபாய் 2. வேண்டுவோர் "மானேஜர் "ஏல விவசாயி" உத்தமபாளையம், மதுரை ஜில்லா" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். (ப—ர்)

## தோழர் செல்வபதி செட்டியார் அவர்களுக்கு ஜே!

பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாக சென்னை மகாணத்தில முதல் முதல் சமத்துவமும் சகோதரத்துவமும கொண்ட ஏழைகள் கட்சியாகிய தொழிலாளர் கட்சியில் துணிந்து நின்று வெற்றிமாலை சூடிய வீர சிங்கமே வருக! தொழிலாளர்களுக்காக உடல் பொருள் ஆவி மூன்றையுந் தத்தம் செய்து தொழிலாளர் முன்னேற்றமே உலகமுன்னேற்றம் என்று நடத்திக் காண்பிக்க வந்த வீரரே வருக! வேஷதாரிகளின் சுயநலஆர்ப்பாட்டத்திற்கும் அட்டகாசத்திற்கும் அஞ்சாது 99 அதிக ஓட்டுகளுடன் வெற்றியடைந்த தோழரே உம் வரவு நல் வரவு ஆகுக! முதல் முதலில் நம் கட்சியின் சார்பாய் நகர சபைக் கதவைத் தொழிலாளர்களுக்கு திறந்துவிட்ட தங்கள் வேலையின பயனாய் அடுத்த ஆண்டில் 5 பேர்களுக்குக் குறையாமல் தொழிலாளர்கள் நகர சபையில் ஸ்தாபனம் பெறவும் சென்னைசட்ட சபை, இந்திய சட்ட சபை முதலிய சபைகளிலும் தொழிலாளர்கள் ஸ்தானம் வகிக்கத்தக்க ஆற்றலை தங்களுக்குக் கொடுத்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

தொழிலாளர்களே! கண் விழியுங்கள், ஏழைமையைகாப்பாற்ற நமது வேலை என்று வாய்ப்பறை அடித்து பலவந்தமாக பணம் வசூலித்து உண்டுதிரியும் கூட்டத்தினர்கள் நமது திரு செல்வபதி செட்டியாருக்குச் செய்த சூழ்ச்சியும் தந்திரத்தையும் நினைத்தாவது கண் விழியுங்கள். அன்பும் சகோதர வாஞ்சையும் ஜீவகாருண்யமும் அகிம்சையும் சுயமரியாதையும் செயலில் நடத்திககாட்டும் உங்கள் தாயாகிய சங்கத்தில் சேர்ந்து பிதாவாகிய தொழில் கட்சிக்கு பாடுபட்டுமுன்னேற்றம் அடையும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

சு. ஆரோக்கியசாமி, தொழிலாளி,
நிருவாக அங்கத்தினர், நாகை.


புருஷனுகலாம! (பாபமே தெய்வம்) அதிக வாலிபம் அடையலாம்!!

நெ. 1 முதல்தரமான உயர்ந்த தாதுபுஷ்டிக்குளிகை 1 வேளையிலேயே பரீக்ஷிக்கலாம்.

ராமஜெயம் ரெண்டு பங்கு! யானை பலம் எழு பங்கு!!
தாது புஷ்டியில் யானை பலமுடையது. தளர்ந்த கிழவனும் சாப்பிடலாம்

எத்தனை வருடத்திய கிழவனானாலும் தாது புஷ்டியில் யானைபலந்தான்

# மதயானைக் குளிகை.

உடைந்து நீர்த்து தண்ணீராக தானே ஓடக்கூடிய தாதுவை இறுக்கி மணியாக்கி நரம்புகள் வலுத்து இருதயம் பலப்பட்டு விடுவதால் மதங்கொண்ட யானையானது கருமலையாயினும் ஓர் முட்டு முட்டித்தாக்கி நிற்பதுபோல நமது சரீரம் பராக்கிரமித்து பலாத்கார சக்தி எற்பட்டு மதங்கொண்ட தாது புஷ்டியை உண்டுபண்ணி ஒன்றையும் எதிர்பாராத தீவிரத்தைக்கொடுக்கவல்லது.

யானைக்கோம்பும் தங்கமும் சேர்த்து தயாரித்த முதல்தர குளிகை:— அடக்க முடியாத மகா பலசக்தி வாய்ந்து நிற்பதை ஒவ்வொருவரும அனுபவித்து அதன் குணத்தைக்கண்டு மெச்ச வேண்டுமென்றெண்ணி இதன் அருமை பெருமைகளை இங்கு விரிவாக எழுதவில்லை. இது அராபு தேசத்து பக்கிரி முறை ரகஸ்யமாயுள்ளது. இந்திரிய இழிவு, துரிதஸ் கலிதம் எனும் மகாகொடிய நோயை வேரறுத்து திராபீனிசம், கபம், இருமல், இளைப்பு, சுரம், அதிசாரம், குருணி, பலவித வயிற்றுப்போக்குகளை நிறுத்தி அதிசார சுரத்திற்கு சஞ்சீவிக் கொப்பானது. மற்ற விபரம் மருந்துடன் வரும். அன்னிய நாட்டினர் முன்பணம் அனுப்பவேணும்.

50 குளிகை விலை ரூ. 3 8 }
100 குளிகை விலை ரூ. 6 0 }
எல்லாவகை குஷ்டங்களையும் சர்வரோகங்களையும் தீர்க்க தமிழ் ஆயுர்வேத மகரிஷிகளின் உயர்ந்த சகல ஔஷதங்களும் உண்டு. விரும்பினால் கேட்டால் இனமாக அனுப்புவோம்.

யானைக்கொம்பும் தங்கமும்சேர்ந்த முதல்தர குளிகை 50 ரூ. 7 8 }
100 குளிகை ரூ. 12 0 }
உலகரக்ஷகன் ஆசிரியர்,

**M. கந்தசாமி பிள்ளை,**
இந்திய மஹரிஷிகள் வைத்தியசாலை, பழனி, (S. I.)

## பிராமணீயம் என்பதன் பொருள். சொல்லைக்கேட்டு ஏமாறுதீர்கள். பொருளை உணருங்கள்.

(சிதம்பரனுர் எழுதுகிறுர்)

ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு வார்த்தைக்கு ஒவ்வொரு பொருள் வழங்குவதுண்டு. அத்தகைய வார்த்தைகளில் பிராமணீயம் என்பதும் ஒன்ருகும். பிராமணீயம் என்னும் சொல் பண்டைக்காலத்தில்பிரமத்தின் தன்மை என்ற பொருளில் வழங்கிற்று. அத்தன்மையைப் பெற்றிருந்தவர்களைப் பிராமணர்களென்று அழைத்து வந்தனர். இக்காலத்தில் பிராமணீயம் என்பதற்கு வேறு பொருள் வழங்கிவிட்டது. எவ்வாறு அரசியல் என்பதற்கு அயோக்கியத்தனம் என்னும் பொருளும், தத்துவ ஞானி என்பதற்குச் சுயநலவாதி என்ற பொருளும் இக்காலத்தில் வழங்குகின்றனவோ அவற்றைப்போலவே பிராமணீயம் என்பதற்குப் பொருளும் வேருக வழங்கிவிட்டது. அப்பொருள் யாதென்பதைச் சிறிது விளக்கத்தொடங்குவோம்.

நகத்திற் சிறிதும் அழுக்குப்படாமல் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு தனது வயிற்றையும் தனது ஜாதியார் வயிற்றையும் எவ்வாறு நிரப்பிக்கொள்ளலாம் என்பதற்கு வழிதேடுவதே பிராமணீயமாயிற்று. கடவுளின் தன்மையை ஆராய்வதிலும், அவைப்பற்றி மக்களுக்கு எடுத்துச்சொல்லுவதிலும் காலங்கழிப்பதுபோய், உத்தியோகங்களை எந்த வழியில் பெறுவது, உத்தியோகங்களில் நம்மினத்தினரை எவ்வாறு நிரப்புவது என்பதிலேயே கவனஞ்செலுத்துவதே பிராமணீயமாயிற்று. எல்லோருங் கடவுளுடைய புத்திரர்கள், ஆகையால் அனைவருக்கும் நலம் செய்யவேண்டும், அனைவரையும் ஒன்ருகக் கருதவேண்டும் என்பது போய், நாம் தான் உலகத்தில் உயர்ந்தவர்கள், கடவுளின் முகத்திலிருந்து பிறந்தவர்கள், எல்லோரும் நமக்கு அடிமை. நாம் பிறரை வஞ்சகத்தாலேயே அடக்கியாளவேண்டும் என்ற கொள்கையே பிராமணீயம ஆயிற்று. அரசியல் நன்கு நடைபெறவேண்டும் என்றும, உலகம் நலமடையவேண்டுமென்றும் இறைவனை நோக்கி வணங்கியிருந்தது போய், அரசாங்கத்தின் பேரால் எவ்வாறு எல்லாமக்களையும் துன்பத்திலாழ்த்தி விட்டு நாம் மட்டிலும் உயர்வாக இருந்து கொண்டு தேவேந்திர போகத்தை அனுபவிக்க முயல்வது என்பதே பிராமணீய மாயிற்று.

கப்பலேறி வேறுநாடு சென்று அங்குள்ள நம் அதிகாரிகளிடம் நம்மைப்பற்றி இகழ்ந்து கூறித் தமக்கும் தம்மைச்சேர்ந்தவர்களுக்கும் இன்னும் உயர்ந்த உயர்ந்த உத்தியோகங்களைப் பெற முயல்வதே பிராமணீயமாயிற்று. யாகம் என்ற பெயரை வைத்துக்கொண்டு மாடு, ஆடு, மனிதன் முதலிய உயிர்களை மந்திரஞ்செய்து கொன்று தின்றதுபோய், மாமிச உணவுகளையும். கள், சாராயம், விஸ்கி, பிராண்டி, ஒயின் முதலிய பொருள்களையும் வெளிப்படையாக உட்கொள்வதே பிராமணீயமாயிற்று. வலது கையில் நெருப்பிருக்கின்றது, ஆதலால் எம்மை இருகைகளாலும் வணங்குனும், நாங்கள் இடதுகையை மட்டிலுந்தான் தூக்குவோம் என்பது போய், கையில் நெருப்புப்பெட்டியும், வாயில் சுருட்டும், சிகரெட்டும், பீடியும் ஆகிய நெருப்பு விளங்குவதே பிராமணீயமாயிற்று.

தமக்கே யாவரும் அடிமையாக இருந்து வேலை செய்யவேண்டுமென்பது போய், காப்பிக்கடையும் சாப்பாட்டுக்கடையும் வைத்துக்கொண்டு,பார்ப்பனரல்லாதார்கள் உதிர்ந்திருக்கும் எச்சிற்பாண்டங்களைக் கழுவுவதாகிய அடிமைத்தொழிலே பிராமணீயமாயிற்று. பொய்ப்பத்திரம் எழுதுவதும், பொய்சாட்சி சொல்லுவதும், சொல்லும்படி செய்வதும், பொய் வழக்குகள் நடத்துவதும், பிராமணீயமாயிற்று. தர்ப்பைப்புல்லும், கிழிந்த பஞ்சாங்கக்கட்டையும் தூக்கிக்கொண்டலைந்தது போய், பொய் வழக்குக் கட்டும், வாக்கிங் ஸ்டிக்கும் தூக்கிக்கொண்டு போவதே பிராமணீயமாயிற்று. கடவுளின் தரிசனம் எப்பொழுது கிடைக்கும என்று எண்ணியிருந்தது போய், கவர்னர் தரிசனம் எப்பொழுது கிடைக்கும், மந்திரிகள் தரிசனம் எப்பொழுது கிடைக்கும என்று எண்ணியிருப்பதே பிராமணீயமாயிற்று. விடிந்தவுடன் நீரில் மூழ்கிவிட்டுச் சூரிய நமஸ்காரம செய்தது போய், விடிந்தவுடன் காபியில் மூழ்கிவிட்டு, உத்தியோகசாலைகளுக்குச் சென்று மேலுத்தியோகஸ்தர் யாராயிருப்பினும் வணங்கி வாழ்வதே பிராமணீயமாயிற்று.

இளம் வயதிலேயே பெண்களை கிழவனுக்குக் கல்யாணம் செய்துகொடுப்பதும், பெண் திரள்வதற்குமுன் மாப்பிள்ளை உருள்வதும், பின்னர் பெண் திரண்டு காப்பமாவதும், குழந்தை பிறவாதபடி மருந்துகொடுத்து கர்ப்பத்தை அழிப்பதும் பிராமணீய மாயிற்று. தவறி குழந்தை பிறந்துவிட்டால் கழுத்தைத் திருகிக் கள்ளிக்காட்டில் எறிவதும, சாக்கடையில் வீசுவதும், கிணற்றில் போடுவதும, ஆறுகளில் போகவிடுவதும், குழி தோண்டிப் புதைப்பதுமாகிய செய்கைகளே பிராமணீயமாயிற்று. வடமொழிக் கல்வி பயில்வதும், பிரமச்சர்ய விரதத்தை அனுசரிப்பதும், மடிதார் வைத்து உடையுடுப்பதும்போய், ஆங்கிலக் கல்வியைப் பயிலவதும், படிக்கும் காலத்திலேயே பாஸ்திரிகமனஞ் செய்வதும், காலங்கி மேலங்கிகளையணிந்து கொள்வதும், கழுத்தில் துளசிமணி ருத்திராக்க மாலைகளை அணிந்து கொள்வது போய் நெக்டை காலர்களால் சுருக்கிட்டு தொங்கவிடுவதும் பிராமணீய மாயிற்று காசி, ராமேஸ்வரம் முதலிய தலங்களுக்குச் செல்வது போய் தென்னுபிரிகா செல்வதும், இங்கிலாந்திற்குப் போவதும், ஜினிவாவிற்கு ஓடுவதும், ஆஸ்திரேலியாவை அடைவதுமே பிராமணீய மாயிற்று பிறவியாகிய கடலைகடக்க முயலவேண்டுமென்பது போய் இந்துமகா சமுத்திரத்தைத் தாண்டுவதும், அராபிக் கடலைத் தாண்டுவதும், வங்காளக்குடாக் கடலைத் தாண்டுவதும பிராமணீயமாயிற்று.

## மதிப்புரை.

### "நாடார் குலமித்திரன்"

ஸ்ரீமான் ஸு. ஆ. முத்துநாடார் அவர்களை பத்திராதிபராகக் கொண்ட "நாடார் குலமித்திரன்" என்னும் தமிழ்வாரப்பத்திரிகையின் ஒன்பதாவது ஆண்டின் முதல் வாரப்பிரதி வரப்பெற்றேம். சென்ற ஆண்டு பத்திரிகையைவிட இவ்வாண்டு பத்திரிகை அளவில் பெரியதாகா விட்டாலும் வனப்பிலும் விஷயத்திலும் அபிவிர்த்தி அடைந்திருப்பதைப் பார்க்க அகமகிழ்கின்றேம். அன்றியும், இப்பத்திரிகை விசேஷமாக நாடார் குல முன்னேற்றத்தையும் பொதுவாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்தையும் தாய்நாட்டின் முன்னேற்றத்தையும் குறிக்கொண்டு அரசியல், சமூகஇயல், கல்வி, மதம் ஆகிய விஷயங்களை எடுத்தாண்டு எழுதிவருவதால் விசேஷமாக நாடார் குலத்தவரும் தமிழ் நாட்டாரும் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேம்.

(ப—ர்)

### "சத்திய தீபம்"

ஸ்ரீமான் M. R. தாஸ் அவர்களை பத்திராதிபராகக் கொண்ட "சத்திய தீபம்" என்னும் மாதாந்தப் பத்திரிகையின் முதல் வருஷத்தின் முதல் பிரதி ஒன்று வரப்பெற்றேம். இது மதம், சமூதாய, அரசியல், கல்வி, சுகாதார பொருளாதார விஷயங்களில் தமிழ் மக்கள் முன்னேற்றமடைய உழைத்துவரும் பத்திரிகைகளிலொன்ருகும். இந்த முதல் பிரதியில் "உண்மை" என்னும் விஷயத்தில் திருவள்ளுவரின் பான்மையைப் பற்றியும் கிருஸ்து நாதரின் பான்மையைப் பற்றியும் பத்திராதிபரின் வியாஸம் யாவரும் ஆராயத்தக்கது.

இப்பத்திரிகையின் வருஷசந்தா ரூ 1. வேண்டுவோர்—பத்திராதிபர் 'சத்திய தீபம்' ஆபீஸ், பாளையங்கோட்டை—என்ற விலாசத்துக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம. (ப—ர்)

---

இன்னும தற்காலப் பிராமணீயத்தின் தன்மைகளையும, பொருள்களையும் விரித்து விளம்பவேண்டுமாயின் இக்கட்டுரை மிக நீண்டுவிடுமாதலின் அதன் பொருளைச் சுருங்கக் கூறி முடிக்கின்றேம. ஆகவே பிராமணீயம் என்பதற்குப் பொருள் இக்காலத்தில, "வஞ்சகத்தனம், அயோக்கியத்தனம். சுயநலத்தன்மை, பிறரை ஏமாற்றித்தாமே உயர்வடையுந்தன்மை, நானே உயர்ந்தவன் என்னும் அகங்காரம, எல்லோரும் எனக்கு அடிமையென்னும கொடுமை எல்லாச்செல்வமும்தனக்கே வேண்டுமென்னும பேராசை எல்லா உத்தியோகங்களையும் தாமே பார்க்க வேண்டும் என்னும் பேராசை ஆகிய இவைகளே இக்காலத்தில பிராமணீயம் என்பதற்குப் பொருள்களாக விளங்குகின்றன.

ஆதலால் தமிழர்களாகிய சுயமரியாதை வீரர்களே! இனியேனும் நீங்கள் பிராமணீயம் என்னும் சொல்லைக்கண்டு மயங்காமல் அதனை ஒழிக்க முற்படுவீர்களென்று நம்புகின்றேன். எனறு நமது நாட்டை விட்டுப் பிராமணீயம ஒழிகின்றதோ அன்றே நமக்கு விடுதலை உண்டாகும். தீய பிராமணீயம் ஒழிவதாக.

## வயிற்றுவலிக்கு தலையில் பற்று.

வாலாஜாபாத் (சிவபுரம்.)

இவ்வூரின்கண் இந்துமதபாடசாலை ஒன்று 7வகுப்புகளோடும், மிஷன் பாடசாலை ஒன்று 8வகுப்பு வரையிலும், க. குப்புசாமி முதலியார் இலவச பாடசாலை ஒன்று 8 வகுப்பு வரையிலும் நிறுவப்பட்டு போதனாமுறை பயின்ற ஆசிரியர்களைக் கொண்டு நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. திருவாளர் க. குப்புசாமி முதலியார் அவர்கள் ஆண்மக்கள் பாடசாலையில் இலவசமாக கல்வி பயிற்றுவதோடு வெளி ஜில்லா மக்களும் பயிலவேண்டி இலவச விடுதிச்சாலையும் உண்டிச்சாலையும் நிறுவியுள்ளார். அன்றியும் பெண் மக்களுக்கும் தனியே ஒரு இலவச பாடசாலையை நிறுவி போதனாமுறை பயின்ற உபாத்தியாயனிகளைக் கொண்டு மகளிர் கற்கவேண்டிய கல்விக்கிணங்க அமைத்து ஓர் பார்வையாளரையும் ஏற்பாடு செய்துள்ளார். பெண்மக்கள் ஆங்காங்கு அமைந்துள்ள மூன்று பாடசாலைகளிலும், கல்வி பயின்றுவருகிறார்கள். தற்போது இங்கே தாலூகா போர்டு பெண் பாடசாலை ஒன்று 10-8-27ல் நிறுவியுள்ளார்கள். மக்கள் நலம்பெற ஆங்காங்கு பாடசாலைகளை நிறுவவேண்டியது போர்டார் கடமையேயெனினும் இத்துணை இலவசப்பள்ளிகளும், தனியான பெண்பாடசாலையும் இருக்கும் இடத்தில் ஏனோ வீணே பொது மக்களின் பணத்தைச் செலவழித்தல் வேண்டும். அரசாங்கத்தாரும் கவனியாது பள்ளியை நிறுவ ஏனோ ஆமோதித்தனர். இந்த யூனியனைச் சேர்ந்த சேர்க்காடு என்னும் ஊரில் செங்குந்தமரபினர் பல ஆண்டுகளாக அவ்வூரில் பாடசாலை ஒன்று ஏற்பாடு செய்ய முயன்றும் இதுகாறும் அவ்வூரில் தாலூகா போர்டு அங்கத்தினர் அவர்களும் கவனித்தாரில்லை. இவ்வூரிலும் பல ஆண்டுகளாக இலவச வைத்தியசாலை (Local fund Hospital) நிறுவவேண்டியும் போர்டாரும் கவனித்தார்களில்லை. ஏழைமக்கள் மிஷன் வைத்தியசாலைக்குச் சென்று பணம் தந்து பிணி போக்கிக்கொள்ள அசக்தராயிருப்பதையும் பொருட்படுத்தினார்களில்லை. என்னே இவர்களின் கூற்று! ஸ்தல சுய ஆட்சியாரின் மதிமயக்கம் என்னவோ! அறியோம். பாடசாலைகளில்லா ஊரில் பாடசாலை அமைக்காதும், வைத்தியசாலை அமைக்கவேண்டிய இடத்தில் பாடசாலை அமைப்பதும் வியப்பே! இஃது வயிற்று வலியால துன்புறுமொருவனுக்கு தலையில்பற்றுபோடுவதுபோன்றன்றோ உளது. ஆகையால் திரு. கோயில் நாயுடு அவர்கள் இப்பக்கத்து அங்கத்தினராயிருப்பதால் இங்கண் ஏற்படும் குறைகளை கவனித்து மக்கள் நலம் பெறவும், பொது நல ஊழியத்திற்கு பாடுபட்டுழைக்கவும் வேண்டுகின்றனம். கல்வி இலாக்கா அதிகாரிகளும் இதைக் கண்ணுற்று பொது மக்கள் பணத்தை வீணே செலவழியாது சேர்க்காட்டில் ஒருபாடசாலை அமைத்து இவ்வூரில் நிறுவியுள்ள அனாவசியமான பெண்பாடசாலையை எடுத்து இலவசவைத்தியசாலையை அமைக்க முன்வருவார்களென நம்புகின்றனம்.

பொது நல ஊழியன்.


முந்துங்கள்! ரூபாய் ஒன்றே ஏமாந்து விடாதீர்கள்

முந்துங்கள்!! ரூபாய் ஒன்றே ஏமாந்து விடாதீர்கள்

உலகப் பிரசித்திபெற்ற

5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்.

நேரிலிருந்து படிப்பதுபோல் தபால் மூலம் தொழிலுக்கு யாதொரு இடையூறன்றி, தமிழ் தெரிந்த எவரும் படித்து திருப்தியடையலாம். ஷை கோர்ஸை நேரில் வந்து படிப்பவர்கள் மாதமொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப் படித்திருக்கிறார்கள். நேரில்வந்து படிப்பதற்கு 50 மாணவர்களுக்கு மேல் எடுக்க இடமில்லை. ஆகையால் ஆகஸ்டு 15-உக்குள் அப்படி படிக்க விரும்புவோர் ரூ. 5 அனுப்பிப்திவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஐந்து வருஷ கல்வி ஒரே வருஷம்.

சே. எஸ். மரைக்காயர்:—நான் மூன்றும் வகுப்புப் படிப்போடு ஷை 5-மீ கோர்ஸில் 1923-ம வருஷம் சேர்ந்து மாதமோன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப்படித்தேன். இங்கிலீஷ் அட்சுரத்திலிருந்து ஆரம்பித்து, வார்த்தைகள், வாக்கியங்களமைந்த கேள்விகள், விடைகள், சம்பாஷணை, தந்தி எழுதுதல், கடிதம் எழுதுதல் முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டதில் சுமார் 50 மாணவர்கள் வரை பூர்த்தி செய்தார்கள். 5 மாதம் கோர்ஸ் முடிந்தவுடன் ஜூனியர் கோர்ஸில் சுமார் 9 மாதங்கள் வாசித்தேன். தற்சமயம் என் அறிவு சுமார் 5 வருஷப் படிப்பிற்கு மேலாக இருக்கிறதென்பது உண்மை. தபால் மூலம் அதே கோர்ஸை மாதம் ஒன்றுக்கு ரூபா 1 வீதம் கற்றுக்கொடுப்பது நம் தமிழ் நாட்டு ஏழை மக்களின் பொருட்டன்றி வேறல்ல.

ஆங்கில பாஷையின் அஸ்திவாரம்

எஸ். பக்கிரிசாமி பிள்ளை:—நான் 5-வது வகுப்பு வரை சுயமாகவே படித்து அநேக புஸ்தகங்களை வாங்கி வாசித்ததில் பிரயோஜனப்படாமல் ஷை கோர்ஸில் சேர்ந்து வாசிக்கிறேன். 1 வாரத்தில் முதல் கோர்ஸை முடித்துவிட்டு இரண்டாம் கோர்ஸ் படிக்கிறேன். பாடங்களில் ஆங்காங்கே கடின பதங்களுக்கு அர்த்தம், உச்சரிப்பு, குறிப்புகள், அப்பியாசங்கள், முதலியவை காணப்படுவதனால் உபாத்தியாயரின்றிப் படித்துக்கொள்ளலாம். சந்தேகங்கள், விடைகள் முதலியன சரியான பிரகாரம் திருத்தப்பட்டிருக்கின்றன. 4, 5, 6, 7 வகுப்பு மாணவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இது நல்ல அஸ்திவாரக் கோர்ஸ் என்றே சொல்லலாம். உடனே சேர்ந்து நன்மையடைவீர்களாக.

உடனே எழுதுங்கள்.

பிரின்சிபால், கேம்பிரிஜ் இன்ஸ்டிடியூட்,

நாகூர்.

ஐயா, இன்று ரூபாய் 1 மணியார்டர் செய்திருக்கிறேன். என் பெயரை பதிவு செய்துகொண்டு உடனே முதல் கோர்ஸ் பாடங்களையும், பிராஸ்-பெக்டஸ் பாரங்கள் முதலியவைகளையும் அனுப்பி வையுங்கள். பாடம் முடிந்தவுடன் பணமனுப்பி ஒவ்வொரு கோர்ஸையும் பெற்றுக்கொள்வதோடு விடைகளை ஒழுங்காய் அனுப்பிவைக்கிறேன்.

பெயர்.................................. தெளிவான விலாசம்..................................


## மதிப்புரை.

சருவ வருண சம சவிளக்க சம்பூர்ண உரை

இப்பாரத தேசீய முன்னேற்றத்தில் உழைத்துவரும் இந்து சகோதர சகோதரிகளே! "பிரிந்தது ஆள்" என்பது உரோமர்களின் பழமொழி. இவ்வாயுதத்தைக் கைக்கொண்டுதான் பிறநாட்டார் வேண்டிய நாட்டினரைப் பல கட்சிகளாய்ப் பிரித்து ஜனநாயக ஒற்றுமையை யழித்து, பயமற்று ஆளுவது வழக்கம். அவ்வண்ணமே, ஆதியில் பிராமணராயினவருள் சுயநலங்கருதிய ஓர் கட்சியினர் ஜனநாயக ஒற்றுமையைக் குலைத்து, தாங்கள் மேன்மையையும், உயர்வையுமடைந்து, மற்றெல்லோரையும் அஞ்ஞானக் கடலில் அமிழ்த்திவிட்டனராதலால் நம்மக்கள் அவர்களது சூழ்ச்சிகளை அறியவும், சுயமரியாதை பெறவும் கருதி "சருவ வருணசமரச விளக்கம்" என்ற நூல் சுருதி, ஸ்மிருதி, புராண மேற்கோள்களுடன் எல்லோரும் உணருமாறு எளிய நடையில் எழுதி அச்சுக்குப் போகும் தருவாயிலிருக்கிறது. ஆனால் கொஞ்சம் பிரதிகளே அச்சடிக்கும் நிலைமையிலிருப்பதால் புத்தகம் வேண்டுவோர் திரு. C. P. இராஜகோபாலன், வித்யா விவாஹ சபைத் தலைவன், திருச்சி." என்ற விலாசத்திற்குரூபாய் ஒன்று வீதம் முன்பணம் அனுப்பினால் அச்சுவேலை முடிந்தவுடன் தபால்சார்ஜ் அன்னியில் புத்தகங்கள் அனுப்பப்படும். அபிமான முள்ள நண்பர்கள் அனுப்பப்படும். அபிமானமுள்ள நண்பர்கள் அன்போடளிக்கும் எத்தகைய உதவிக்கும் அவர்கள் அருகர். (ப—ர்).

# மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.




குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள் உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—**மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.**





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்

## பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரக்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிலகப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்குமிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சினேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குரு அப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள் குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம


**சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்**

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் கம்பெனி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}''$ x $2\frac{1}{2}''$ ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.

பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்



## சுப்பிரமணியர் வைத்தியசாலை.

சகலகாரியங்களும் அநுகூலம். சகலவசியங்களும் ஏற்படும். விசுவாசம், வியாதியை கொடுக்கும் பயங்கரங்கள் நீங்கும் தரித்திரம் முதலியது அணுகாது.

சக்கரம் 1-க்கு விலை ரூ. 2 தபால் செலவு வேறு

இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமணிய உபாசி

பழனி. Palni P. O (S. I.)



## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, தாதுஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த குளிகை சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

## மகா ரசகெந்தி மெழுகு.


தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், சிமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.





## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்


## போளூர் யூனியன் போர்டு பிரசிடெண்டு எலக்ஷன் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி

19-8-27 காலையில் யூனியன் போர்டு பிரசிடெண்டு எலக்ஷன் யூனியன் போர்டு ஆபீசில் நடைபெற்றது. அது சமயம் போளூர் திராவிடசங்கம் காரியதரிசி திரு. ஏ. நாதமுனி முதலியாரும் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக திருஜனார்த்தனநாயுடு [illegible] போட்டி [illegible]ன்றார்கள். சுயராஜ்யகக்ஷியார் திருஜனார்த்தனநாயுடுவுக்காக பகீரதப்பிரயத்தனம் செய்தும் பலிக்காமல் ஸ்ரீமான் ஏ. நாதமுனி முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டார் [illegible] போளூர் திராவிட சங்க காரியதரிசி [illegible]கிறார்.

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான் நாலேர்துதலேமுறையாய்க் கையாண்டு வந்து இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அனேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது, பல தேகோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப் பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.



# தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், பொரி குஷ்டம், விரிகுஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி தர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிரானி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களைசீக்கிரத்தில 5, 10, 21-வேளைகளில் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம் | முதல் நெ. தாம்பரபற்பம் அனுபான சூர்ணத்துடன் | 21-நாள் விலை ரூ. 30 | (தபால் பிரத்தியேகம்) |
| | ,, ,, ,, ,, | 10-நாள் விலை ரூ. 15 | |
| | 2-ம் நெ. ,, ,, ,, | 40-நாள் விலை ரூ. 40 | |

1. நற்சாட்சி:—பினங்கு பிரை[Prey] யிலிருக்கும் சி. வி. தோமஸ் என்பவர் மருந்து சாப்பிட்டு அனுபோகத்தைச் சொல்லுகிறதைக் கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பியமுதல் நம்பர்தாம்பிர பற்பத்தை நான் 5நாள் சாப்பிட்டேன் கருமேக நீர் சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப் படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு நான் உறுதியாய் நம்பிக் கொள்ளுகிறேன். 16-2-27. சி. வி. தோமஸ்,

என் பேருக்கு தாங்களனுப்பிய தாம்பிர பஸ்பமானது மிகவும் அருமையானதும் அற்புதமானதுமான வேலை செய்திருக்கிறது: எப்படி யெனில்:— ஓர் எளிய ஸ்திரீக்கு காலில் முழங்காலுக்குக் கீழ் நுணுக்காயைப் போல் மேகவியாதி கால் பாதமிரண்டும் வீக்கம், இதற்காக நானும் சிலரும் சேர்ந்து பணம் வசூலித்து ஷை பஸ்பத்தின் வி. பி. யை வாங்குவதற்காக தயார் செய்து பார்சல் எங்களுக்குக் கிடைத்த அன்றைதினமே கொடுத்து இரண்டு தினம் நாலுவேளையில் காய்காயாக இருந்தது வற்றவும், பாதவீக்கமாக இருந்தது வடியவும், ஆரம்பித்து 5-நாள் 10-வேளை மருந்தில் முற்றிலும் உதிர்ந்து வீக்கமும் வாங்கி விட்டது. அநேகருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகி விட்டது.

6-2-25 (Sd) T. A. பிள்ளை, மூர்ரோட்டு பெங்களூர் டவுன்.

விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

## ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்,

சுதானந்த மெடிகல்ஹால், பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்திய.
தந்தி விலாசம்: — 'சற்குரு பழனி'

நமது சோல் ஏஜண்டு { M. E. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் 86டேலூக்கொடாங்கு ரோட்டு. கிளாங்கு—Klang F. M. S.

13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

# 'ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனாம்.
விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில பக்தியுள்ளவர்கள் சந்தாகாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு

## உறையூர் அங்கவஸ்த்திரங்கள்.

அசல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "வறற" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.
2¾ அகலம 5 முழம் 1க்கு ரூ 1—12—0
ஷை சரிகை சீர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு
மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உரையூர் போஸ்டு
திருச்சி

## மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.
விலை ரூபாய் ஒன்று. மூ. வடிவேல் செட்டி,
110, ஈஸ்வரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.